
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



சீதேவி பூதேவி இருபால் நிற்கத்
திருப்பதியில் காட்சிதரும் சீனி வாசா !
மாதவம்செய் நகரத்தார் வீட்டுப் பெண்கள்
மணக்கோலம் காணவரம் தருவா யப்பா.

மார்ச், 1992

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 11

ஒலி 2

பிரஜோத்
பத்தி

மாசி

மார்ச்

1992

மலைபோன்ற செம்பொற்குலை வைத்திருப்பவர்
மறலிதான் வருகையில் வாரிச் செல்வரோ ?
அலையாமல் அகத்தினை அத்தன்பால் வைத்தோர்
அழியார்என் றேநீ துணிந்து ஆடுபாம்பே.

— பாம்பாட்டிச் சித்தர்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
20, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு,
மதுரை-625 009

தொலைபேசி p. p. 32084

ஆண்டுச் சந்தா ரூ. 30-00

டெபாசிட் சந்தா ரூ. 300-00

தமிழக முதல்வருக்கு நன்றி !

சுதந்திர இந்தியாவில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தின் வரலாற்றில் இன்று ஒரு பொன்னுள் ஆகும். நம் சமூகத்தைச் சேர்ந்த மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்கள் தமிழக அமைச்சராகச் சில தினங்களுக்கு முன்பு பதவி ஏற்றிருக்கிறுர்கள். அவர்களை மனமார வாழ்த்தி வரவேற்கிறோம்.

காசி முதல் கன்னியாகுமரி வரை நகரத்தார் செய்துள்ள, செய்து வரும் திருப்பணிகளுக்கும் தன்னகரில்லா தமிழ்ப் பணிகளுக்கும் உயர்வு தந்து. உழைப்பிற்கும் திறமைக்கும் மதிப்பளித்து, சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவராயினும், வழக்கறிஞர் எஸ். ரகுபதி அவர்களை அமைச்சராக்கி புதிய வரலாறு படைத்திருக்கும் தமிழக முதல்வர், பொன்மனச் செல்வி, புரட்சித் தலைவி, டாக்டர் ஜெயலலிதா அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வி. என். சிதம்பரம்
ஆசிரியர், "நகரத்தார் குரல்"

வழக்கறிஞர் எஸ். ரகுபதி அமைச்சரானுர் !

திருமயம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான திரு. எஸ். ரகுபதி 27-2-92 அன்று தமிழக தொழிலாளர் நலத்துறை அமைச்சராகப் பதவி ஏற்றுர். அவருக்குத் தமிழக ஆளுநர் மேதகு பீஷ்ம நாராயண சிங் அவர்கள் பதவிப் பிரமாணமும் இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்கள்.


பதவியேற்பு

ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இப் பதவியேற்பு நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் ஜெயலலிதா, சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. பொன்னுசாமி, அரசு கொரடா திரு. கா. ப. பட்டாபிராமன், அட்வகேட் ஜெனரல் திரு. கே. சுப்பிரமணியம், தலைமைச் செயலாளர் திரு. டி வி. வெங்கட்ராமன், பொதுத்துறைச் செயலாளர் திரு. பாஸ்கர் ராவ், போலீஸ் டைரக்டர் ஜெனரல் திரு. ஸ்ரீபால், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. தேவாரம், போலீஸ் கமிஷனர் திரு. இராஜகோபாலன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முதல்வரிடம் ஆசி

புதிய அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி தமிழக முதல்வரிடம் ஆசி பெற்றபின் தன் பணியைத் தொடங்கினுர்.

(4ஆம் பக்கம் பார்க்க)



புதிய அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி

பாட்டெழுதும் ஆசை பறந்து போனது!

அச்சுத் தொழில் தொடங்கலாம் என எண்ணி நான் கம்பன் அடிப்பொடி அவர்களிடம் ஆலோசனை கேட்டேன். அவர் ''அத் தொழில் வேண்டாம்'' என்றார். நான் அவரது கருத்தை மீறிச் செயல்பட்டேன். அத் தொழிலில் எனக்குப் பெரும் நட்டம்.

அதேபோல திரைப் படங்களுக்குப் பாடல் எழுத வேண்டும் என்ற ஆவலினால் அண்ணன் எஸ்பி. முத்துராமன் அவர்களிடம் போய் ஆலோசனை கேட்டேன். அவர்கள் ''அதை விட்டுவிட்டு வேறு வேலை பாருங்கள்'' என்றார். இன்று அதுவும் ஒரு விதத்தில் நல்லதாகப் போயிற்று!

— அரு. நாகப்பன்

(காரைக்குடியில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவில்)

துறைகள்

மாண்புமிகு எஸ். ரகுபதி தொழிலாளர் நலம் தவிர, வேலை வாய்ப்புப் பயிற்சி, நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் கணக்கெடுப்பு ஆகிய துறைகளைக் கவனித்து வருகிறார்.

மாண்புமிகு எஸ். ரகுபதி தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் திருமயம் தொகுதியில் அ. இ. அ. தி. மு. க. சார்பில் போட்டியிட்டு 44,731 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றவர்.

வாழ்க்கைக் குறிப்பு

மாண்புமிகு எஸ். ரகுபதி வி. லெட்சுமிபுரத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தையார் திரு. சேவுகன் செட்டியார். தாயார் திருமதி சிந்தாமணி ஆச்சி. இவர் B. Sc., B L. பட்டம் பெற்று 1974 முதல் வழக்கறிஞராகத் தொழில் செய்து வருகிறார். 1977 முதல் 1980 வரை புதுக்கோட்டை அ. தி. மு க. வின் நகரச் செயலாளராகவும் 1980 முதல் புதுக்கோட்டை மாவட்ட அ.இ.அ.தி. மு. க. வின் செயலாளராகவும் தொண்டாற்றியவர்.

இவரது துணைவியார் திருமதி சரோஜா ஆச்சி ஆவார். இவர்களுக்கு வள்ளியம்மை (என்கிற கவிதா) என்கிற புதல்வியும் அண்ணாமலை என்கிற புதல்வனும் உள்ளனர்.

பெருமை

நம் நாடு சுதந்திரம் பெற்றபின் தமிழகத்தில் நம்மினத்தில் அமைச்சர் பதவியில் ஒருவர் கூட இருந்ததில்லை. அந்தப் பெருமை இப்போது மாண்புமிகு எஸ். ரகுபதிக்குக் கிடைத்திருக்கிறது.

நன்றி

புதிய அமைச்சருக்கு நமது மகிழ்ச்சியையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரை அமைச்சர் பதவியில் அமரச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதாஅவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அழவைத்துப் பார்ப்பதில் கண்ணதாசன் மன்னன்

ஒரு கவிதையைப் படித்து முடித்த பின்னால் ஒன்று ஆயுதத்தைத் தூக்க வேண்டும்; அல்லது கண்ணீர் வடிக்க வேண்டும். அழவைத்துப் பார்ப்பதில் கண்ணதாசன் மன்னன்.

பாரதியின் சில பாடல்களுக்கு உரை ஆசிரியர் தேவை. பிரபந்தங்களுக்குக் கூட உரை ஆசிரியர் தேவை. ஆனால் கண்ணதாசனின் பாடல்களுக்கு யாரும் தேவையில்லை. படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் உறவை ஏற்படுத்தியவர் கண்ணதாசன்.

— மு. சிதம்பரபாரதி
(காரைக்குடி கண்ணதாசன் விழாவில்)

"கண்ணதாசனுடைய வாழ்க்கையில் காதல் விவகாரம் என்பது ஒரு சனியன்!"

கவிஞர் கண்ணதாசன், சரா சரி எழுத்தாளனாக முயற்சி மேற்கொண்டது முதல் அவர் கால மாகும்வரை அவருடன் கூட இருந்த ஒரு நீண்டகால நண்பன் நான். அவரது இன்ப-துன்பங் களை அருகில் இருந்து கண்டவன் நான்.

மகாத்மாவின் ''சத்திய சோ தனை''க்குப் பிறகு கண்ணதாசன் எழுதிய ''வனவாசம்'' சுயசரிதம் தான் சிறந்து விளங்கியது. மற்ற வாழ்க்கை வரலாற்று நூல்களில் பெருமைகளை மட்டுமே காண முடிந்தது. வனவாசத்தில் கவிஞர் தன்னுடைய குறைகளை மட்டுமே சொல்லியிருக்கிறார். கண்ணதாச னின் படைப்புக்களும் வாழ்க்கை வரலாறும் முக்கியமானவை.

நானும் கண்ணதாசனும் மாடர்ன் தியேட்டர்ஸில் ஒன்றாகப் பணியாற்றினோம். அவர் அவர்க ளது ''சண்டமாருதம்'' பத்திரி கையில் ஆசிரியராகப் பணியாற்றி னார். அப்போது அவருக்கு 90 ரூபாய் சம்பளம். சம்பளம் வாங் கிய பிறகு முதல் நாள் ராஜா; 2ஆவது நாள் மந்திரி; 3 ஆவது நாள் சேவகன். அப்போது அவர் பணத்திற்கு ரொம்பக் கஷ்டப்பட் டார். மாடர்ன் தியேட்டர்ஸார் அவருடைய திறமைகளைச் சரியா

கப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

பாபநாசம் சிவன், உடுமலை நாராயண கவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோர் பிரபலமாக இருந்த நேரம் கண்ணதாசன் திரை உலகில் அடியெடுத்து வைத்துப் படிப்படியாக வளர்ந்து வந்தார்.

பொள்ளாச்சி கூட்டத்திற்கு கலைஞருடன் கண்ணதாசன் சென்றுர் அங்கு 'கவிஞர் கண்ணதாசன்' என்று அவரைக் கலைஞர் அறிமுகம் செய்துவைக்க, அவர் மளமளவென அங்கீகாரம் பெறத் தொடங்கினுர்.



கண்ணதாசனிடம் அதீத சக்தி இருந்தது. கண்ணதாசனிடம் எழுதி வாங்குவது என்பது ரொம்பச் சிரமமானது. அவரது வாழ்க்கையில் சனியன் பிடிக்கிறது என்ருல் அது அவருடைய காதல் விவகாரமாகத்தான் இருக்கும்.

மகாத்மா காந்தி இறப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு, காந்தி இறந்து போனதாக தாம் கனவு கண்டதாக, கண்ணதாசன் சொன்னுர். வரண்டு போய்க் கிடந்த பாண்டிச்சேரியில் மழை பெய்ய வேண்டி கண்ணதாசன் கவிதை பாடியவுடன், மழை கொட்டோ கொட்டென்று கொட்டித் தீர்த்தது. அவரது நாக்கில் ஏதாவது வந்தால் அது உண்மையாகிவிடும். கண்ணதாசன் சத்தியத்தின் பக்கத்தில் இருந்தார்.

நாடு முழுவதும் கோயில் திருப்பணிகள் செய்த இனம், நாட்டுக்கோட்டை நகரத்தார் இனம். அந்தக் குலத்தில் பிறந்த கண்ணதாசன் எவ்வளவு காலம் நாத்திகம் பேச முடியும்? அடிப்படையான தெய்வ பக்தி அவரை தி. மு க விலிருந்து வெளியே கொண்டு வந்தது.

ஈ. வி. கே சம்பத்துக்கு கண்ணதாசன் மாதிரிப் பாடுபட்ட மனிதன், வேறு யாரும் இருக்க முடியாது!

அகில இந்தியக் காங்கிரஸ் குழுவில் 'குடிப் பழக்கம் இல்லாதவன்' என்று சான்றிதழ் கொடுக்காமல் உறுப்பினராக இருந்த ஒரே ஆள் கண்ணதாசன்தான்.

— முக்தா சீனிவாசன்
(திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர்)

(காரைக்குடியில் 23-2-92 அன்று நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் பேசியதன் சுருக்கம்)

ஃ தேனூர் ஸ்ரீ சிவகாமி நூற்பாலையின் நிர்வாக இயக்குநர் கருமுத்து திரு. எஸ். சொக்கலிங்கம் செட்டியார் விஸ்வ ஹிந்து பரிஷத்தின் மாநிலத் துணைத் தலைவராகச் செயலாற்றி வருகிருர்.

உ

பங்குனி உத்திரம்

சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் தெரிசனம்

16 3—92 to 18—3—92 (3 நாட்கள்)

டீலக்ஸ் பஸ் பிரயாணம்

15—3—92உ ஞாயிற்றுக்கிழமை இரவு இருமுடி கட்டுதல்

சித்திரை விசு - ஸ்ரீ சபரிமலை ஐயப்பன் தெரிசனம்

12 4—92 to 14—4-92 (3 நாட்கள்)

11—4—92உ சனிக்கிழமை இரவு இருமுடி கட்டுதல்

மதுரை — திருமூர்த்தி மலை - குருவாயூர் — காலடி (தங்கல்)
சோட்டாணிக்கரை - பம்பை - சன்னிதானம் (தங்கல்)
ஆரியங்காவு — மதுரை. காலை ஆகாரம், பகல் சாப்பாடு.
மாலை ஸ்வீட், காரம், காபி, இரவு ஆகாரம், பஸ் கட்டணம்,
தங்கும் வசதி உள்பட நபர் 1க்கு கட்டணம் ரூ. 315/-
3 வயது முதல் 6 வயதிற்குள் அரைக் கட்டணம் ரூ. 240/-

கோடை விடுமுறை - 'கர்நாடகா சுற்றுலா

19-4-92 to 26-4-92 (8 நாட்கள்) டீலக்ஸ் பஸ் பிரயாணம்
2-5-92 to 9-5-92 (8 நாட்கள்) டீலக்ஸ் பஸ் பிரயாணம்

மதுரை—பண்ணாரி-மைசூர்-சுப்ரமண்யா—தர்மஸ்தலம்—உடுப்பி—மூகாம்பிகை—கோகர்ணம்—ஜோக்பால்ஸ்-சிருங்கேரி—பேளூர்—ஹாலேபீடு-சரவணபெலகுலா—பெங்களூர்-மதுரை.

பஸ் கட்டணம், தங்கும் வசதி, 4 வேளை ஆகாரம் உள்பட
(கர்நாடகா வரி உள்பட) நபர் 1க்கு ரூ. 830/-
3 வயது முதல் 6 வயதிற்குள் அரைக் கட்டணம் ரூ. 650/-

வட இந்திய காசி யாத்திரை

15-5-92 முதல் 15 நாட்கள்

காசி—சாரநாத்—அலகாபாத்—கயா-புத்தகயா-டெல்ஹி-ஆக்ரா-மதுரா-பிருந்தாவனம்—ஹரித்துவார்—ரிஷிகேஷ்

III டயர் (தூங்கும் வசதி) ரயில் கட்டணம், சாப்பாடு,
ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு உள்பட நபர் 1க்கு ரூ. 2100/-

SUBAM TRAVEL AGENCY

சுபம்

டிராவல்ஸ் ஏஜன்ஸி

226, நாயக்கர் புதுத் தெரு, மதுரை-1. ☎ 22712

"கண்ணதாசனின் கவிதைகள் வாழும்!"

கவியரசருக்குப் பெருமை சேர்க்க இவ்வளவு கவிஞர்கள் வந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. என் தந்தை போன்றவர்கள் பாடுபட்டது இப்போது பலன் அளித்துக் கொண்டிருக்கிறது.

வி. என். சிடி. அவர்கள் மேயராக வரவேண்டும் என்ருர்கள். அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இலாபம் வரும் என்ருல்தான் நான் வி. என். சிடி. அவர்களுக்குத் துணை போவேன்; நட்டம் வரும் என்ருல் நான் ஒதுங்கிக் கொள்வேன். வி. என். சிடி. அவர்கள் இன்னும் பல நல்ல காரியங்கள் செய்ய துணை நிற்போம்.

''தென்றல்'' பத்திரிகையில் நான் கண்ணதாசனேடு பணியாற்றினேன். அவரது அலுவலகத்திலும் வீட்டிலும் தங்கினேன். அன்றைக்கு விதைக்கப்பட்ட வித்து இன்று பெரிதாக வளர்ந்திருக்கிறது. கவியரசரது ஆற்றல், திறமை எல்லோருக்கும் தெரிந்ததுதான். எத்தனை முறையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பல்லவியை மாற்றித் தருவார்.


டி வி. ஆனுலும் சரி, கேபிள் டி. வி. ஆனுலும் சரி, வாஞெலி ஆனுலும் சரி, கவியரசரது பாடல்களைப் போடாவிட்டால் அது சிறக்காது.

தமிழ் உள்ளளவும் தமிழர்கள் உள்ளளவும் கவியரசர் கண்ணதாசனின் கவிதைகள் வாழும்.

கண்ணதாசன் சொல்லியபடி நாம் வாழ்ந்து காட்டுவோம் - செய்தபடி அல்ல!

— திரைப்பட இயக்குநர் எஸ்பி. முத்துராமன்

(காரைக்குடியில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவில்)



கலாமடம் - பாதரக்குடி ஆதீனகர்த்தரின் 37ஆவது ஜெயந்தி விழாவில் கோவிலூர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞானதேசிக சுவாமிகள் உரையாற்றுகிருர். அருகே 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. 'அருட்பணி அண்ணல்' பட்டம் பெற்ற வீர. அழ. அ. அழகப்ப செட்டியார், துலாவூர் சுவாமிகள், கலாமடம்—பாதரக்குடி சுவாமிகள்.



எனது ஆலய அனுபவங்கள்

வி.என்.சிதம்பரம்

— 9 —

பாராட்டு விழா முடிந்தபிறகு, கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்களை காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் சந்தித்தேன். ''ஐயா, பதவியின் பெருமையில் மகிழ்ந்திருந்த எனக்கு 'பொறுப்பு' கிடைத்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியது தாங்கள்தான். எனவே, இப்பொறுப்பை எப்படிக் கட்டிக் காக்க வேண்டுமென்று தாங்கள் எனக்கு ஆலோசனை வழங்க வேண்டும்'' என வேண்டினேன். ''அதன் அடிப்படையில்தான், இனி நான் செயல்படவிருக்கிறேன்'' என்றேன்.

அதற்கு அவர் ''மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயில் உலகப் புகழ் பெற்றது. புராணகாலச் சிறப்பும், நிகழ்கால வரலாற்றுச் சிறப்பும் ஒருங்கே அமைந்தது. சில ஆலயங்களில் ஆண்டவனுடைய அருள்மட்டும் கிட்டும். (உதாரணம் : பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில்) சில ஆலயங்களில் சிற்பக் கலைகள் மட்டுமே மேலோங்கி நிற்கும். (உதாரணம் : தஞ்சைப் பெரிய கோயில்) ஒருசில ஆலயங்களோ பக்தி, சிற்பக் கலை இரண்டும் ஒருங்கே அமையப்பெற்றுத் திகழும். அவற்றில் தலைசிறந்து விளங்குவது மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் ஆகும். நம்நாட்டுப் பக்தர்களும், வெளிநாட்டுப் பயணிகளும் எளிதாக வருகை தந்து தரிசித்துச் செல்வதற்கு ஏற்ப விமானம் இரயில் போன்ற



கம்பன் அடிப்பொடி
சா. கணேசன்

போக்குவரத்து வசதி அமையப் பெற்றதனாலும், காசி-இராமேஸ்வரம் செல்லும் பக்தர்கள் மதுரை வழியே செல்லவேண்டிய அமைப்பு இருப்பதாலும் ஆண்டு முழுவதும் திரளான பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழியும் கோயிலாக மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் உள்ளது.''

''எத்தனையோ அரசர்கள் அரண்மனைகளையும் ஆலயங்களையும் கட்டி இருக்கிறுர்கள். ஆனுல் அரண்மனைகள் நிலைத்து நின்றதாக வரலாறு இல்லை. அதே சமயம் அவர்கள் கட்டிய ஆலயங்கள் மட்டும் காலந்தோறும் புதுப்பிக்கப்பட்டு மென்மேலும் பொலிவுடன் திகழ்ந்து பக்திப் பரவசத்தை ஊட்டிக் கொண்டிருக்கிறது.'' (உதாரணம்: பாண்டிய மன்னர்கள் பலர் வாழையடி வாழையாக அரண்மனையையும், மதுரை அருள்மிகு மீனுட்சி திருக்கோயிலையும் கட்டி வந்தார்கள். ஆனால், அவர்கள் கட்டிய அரண்மனைகள் நிற்கவில்லை. அருள்மிகு மீனுட்சியம்மன் ஆலயம் மட்டும் நிலைத்து நிற்கிறது.)

''குறிப்பாக, மன்னர் திருமலை நாயக்கர் அன்னை மீனாட்சி அம்மை மீது கொண்ட பக்தியின் காரணமாக அருள்மிகு மீனாட்சி ஆலயத்தை விரிவு படுத்தினார். தான் ஆட்சி செலுத்துவதற்காக அரண்மனையையும் கட்டினார். ஆனால், அரண்மனையைக் காட்டிலும் அவர் கட்டிய மீனாட்சி ஆலயம்தான் நீடித்து நிலைத்து நின்று, கோடிக்கணக்கான பக்தர்களை ஈர்த்துக் கொண்டிருக்கிறது. அவருடைய அரண்மனை வடக்கே இருக்கும் தாஜ்மஹாலுக்கு இணையாக தெற்கே திகழ்ந்தது. அவருடைய பேரன் அந்த அரண்மனையின் பெரும்பகுதியை இடித்து திருச்சிக்கு எடுத்துச் சென்று அங்குள்ள அரண்மனையை விரிவுபடுத்தினுன். இப்பொழுது எஞ்சி இருப்பது முன்பிருந்த 20 ல் ஒரு பகுதி தான். ஆனால், அவர் மீனாட்சி திருக்கோயிலுக்குச் செய்த திருப்பணிகள் இன்றளவும் அவரது பெயரை உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. உடலால் இறந்து பட்டாலும், புகழால் வாழ்ந்து கொண்டிருக்கிறார் மன்னர் திருமலை நாயக்கர். இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஆலயத்தின் பெருமையின் நிழலில் நின்று கொண்டிருக்கிறாய். இனிமேல் நீ செய்யும் தொண்டின் காரணமாகத்தான் உனது புகழ் நிற்க வேண்டும்'' என அறிவுரை கூறினார்.

அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, பலர் அவரைக் காணவந்தார்கள். ஆனால், அவர் 'எவரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம்' எனச் சொல்லிவிட்டார். நான் அவருடன் உரையாடிய ஒரு மணி நேரத்தில் ஒரு முறை கூட அவர் சிரித்து, நான் பார்க்கவில்லை. ஆனால் அவருடைய அறிவுரை என்னைச் சிந்திக்க வைத்துக்கொண்டே இருந்தது. நக்கீரர், விசுவாமித்திரர் ஆகியோரைப் பற்றி படித்து அறிந்திருக்கிறேன். பெரியவர் சா. கணேசனார் உருவில் அந்த நக்கீரரையும், விசுவாமித்திரரையும் கண்டேன். அவ்வளவு கண்ணியத்துடன்கூடிய கண்டிப்பு அவருடைய அறிவுரையில் மேலோங்கி நின்றது. அவரை வணங்கி விடை பெற்றுத் திரும்பினேன். பெரியவர் சா. கணேசன் அவர்களின் மறைவு நகரத்தார் சமுதாயத்திற்கு மட்டுமின்றி மனித சமுதாயத்திற்கே பேரிழப்பாகும்.

(தொடரும்)

கண்ணதாசன் விழாவில் காதில் விழுந்தவை!

புத்தர் பெருமானுக்கும் காந்திமகானுக்கும் அபிரகாம்லிங்கனுக்கும் அவரவர்கள் வாழ்ந்தபோது புகழ் கிடைக்கவில்லை. ஆனால் கண்ணதாசனுக்குக் கிடைத்தது.

— பேராசிரியர் பாஸ்கரபாண்டியன்

கற்பனையில்லாதது கவிதையாக இருக்க முடியாது; கற்பனைத் திறன் இல்லாதவன் கவிஞனாக இருக்க முடியாது.

— சாது சாரங்கபாணி

கறுப்புப் பணத்தால் நாடே அழிகிறது என்பதற்காக ''கறுப்புப் பணம்'' படத்தைச் சொந்தமாகத் தயாரித்து அதில் நடிக்கவும் செய்தார் கண்ணதாசன். வேறு எந்தக் கவிஞனுக்கு இந்தச் சிந்தனை ஏற்பட்டது?

— புலவர் மு. கதிரவன்

காவடிச் சிந்தில் விளையாடியவர் கண்ணதாசன்; அந்தாதியைத் திரை உலகத்திற்குக் கொண்டுவந்த பெருமையும் அவருக்கே

— வழக்கறிஞர் த. இராமலிங்கம்

மாட்டு வண்டி போகிற இடங்களிலெல்லாம் கண்ணதாசனின் பாட்டு வண்டி போய்க் கொண்டிருக்கிறது.

— சு. சரசுவதி

காரைக்குடியில் கம்பனுக்கு மணிமண்டபம் உள்ளது. அதுபோல் கண்ணதாசன் நினைவாக மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது. இச் சிறப்பு வேறு எந்த ஒரு நகரத்திற்கும் இல்லை.

— ஏ. திருநாவுக்கரசு செட்டியார்

'ஏன் பிறந்தாய் மகனே?' என்று அன்று கண்ணதாசன் பாடினார். இப்போது அவர் இருப்பாரேயானால் 'ஏன் பிறந்தாய் மகளே?' என்று பாடியிருப்பார். காரணம் வரதட்சணைக் கொடுமை அவ்வளவு கொடூரமாக உள்ளது.

— அலமேலு முகுந்தன்

கவியரசருக்கு அடுத்தபடியாக நான் இருவரைக் கவிஞர்களாக மதிக்கிறேன். ஒருவர்: டாக்டர் அர. சிங்காரவடிவேலன்; மற்றொருவர்: மக்கள் கவிஞர் அரு. நாகப்பன்.

— எல். கே. சுபாஷ் சந்திரபோஸ்

எட்டாவது குழந்தையாகப் பிறந்து எட்டாவது வரை படித்து யாரும் எட்டாத வகையில் புகழ் பெற்றவர் கவியரசர் கண்ணதாசன்.

— மு. கற்பகம், எம். எல். ஏ.

(காரைக்குடியில் 22 & 23-2-92 ஆகிய இரு தினங்கள் நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் கூறியவை)

தொகுப்பு : ''எல்லெஸ்''

வண்ணத்துப் பூச்சி கண்ணதாசன்!

கண்ணதாசன் ஒரு அற்புதக் கவிஞன். அவர் குழந்தை உள்ளம் கொண்டவர். பல்வேறு நபர்களின் வாழ்க்கையைச் சீரமைத்தவர். தத்துவ முத்துக்கள் பல வடித்துத் தந்தவர். தன்னிகரில்லா மன்னவர். அவரது பாடல்களில் கவிதை நயம் பொங்கும். கண்ணதாசன் திட்டுவதை அவருடைய தமிழுக்காகப் பொறுத்துக் கொண்டவர்கள் பலர். அவர் ஒரு வண்ணத்துப் பூச்சியாக வடிவெடுத்து அமர காவியங்கள் பாடியவர்.

— எம். மாரியப்பன்
(குற்றவியல் நடுவர் மன்ற நீதிபதி)

(காரைக்குடியில் 22—2—92 அன்று நடைபெற்ற கண்ணதாசன் விழாவில்)

காரைக்குடி சுழற்குழுவின் சுற்றுலா

காரைக்குடி சுழற்குழு மற்றும் இன்னர்வீல் சங்க உறுப்பினர்கள் 16-2-92 அன்று ஒன்பது நகரக் கோவில்களுக்கும் வேந்தன்பட்டி நந்திகேஸ்வரர் கோவிலுக்கும் சுற்றுலாவாகச் சென்று இறை வழிபாடு செய்து திரும்பினர். கோவில் நிர்வாக அறங்காவலர்கள் மரியாதை செய்து அனுப்பி வைத்தனர்.

தேவகோட்டை-திருச்செந்தூர் பாதயாத்திரைக் காவடி

தேவகோட்டையிலிருந்து பதினொரும் ஆண்டாகச் சித்திரா பௌர்ணமிக் காவடி 10-4-92 காலை புறப்பட்டு 17-4-92 காலை திருச்செந்தூர் அடையுமென்றும் அன்று மாலையில் காவடி பாற்குடங்கள் முருகப் பெருமானுக்குச் செலுத்தப் பெறுமென்றும் அதன் அமைப்பாளர்கள் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் 'காசிஸ்ரீ' திரு. ஆர். வயிரவன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

காரைக்குடி நகரச் சிவன்கோயிலில் வழிபாடு

காரைக்குடி நகரச் சிவன் கோவிலில் மகாமகத்தை முன்னிட்டு 18-2-92 அன்று சிறப்பான வழிபாடு, அலங்கார, ஆராதனைகள் நடைபெற்றன. மாலையில் நிகழ்ந்த ஆன்மீகப் பேரவையில் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் ''மங்கையர்க்கரசியார்'' பற்றி இரண்டு மணி நேரம் விரிவுரை நிகழ்த்தினர். உபயதாரரும், சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமாகிய டாக்டர் திரு. வெ. தெ. மாணிக்கம் வரவேற்று திரு. அரு. சோ.வுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். இரவு பஞ்சமூர்த்தி திருவீதி உலா நடைபெற்றது.

கவிஞர் செல்லகணபதியின் நூல் வெளியீட்டு விழா !

கண்டனூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவை ஒட்டி 8-2-92 மாலை கவிஞர் திரு. செல்லகணபதியின் ''மனக் கோவில் வாழும் உமையே'' என்ற நூலின் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் தலைமை ஏற்று ஆசியுரை வழங்கினார்கள். நூலை மத்திய வணிகத்துறை இணை அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் வெளியிட்டு "ஒவ்வொரு துறையிலிருக்கும் ஒவ்வொருவருக்கும் கவிஞர் மிகச் சிறந்த கவிதையைப் பாடியிருக்கிறார்.

'பாதைஎன் றால்வரும்
பள்ளமேடாயிரம்
பார்த்துதான் போக வேண்டும்
பயணமேற் கொண்டபின்
பாதைக்கு அஞ்சினால்
பாதியில் நின்று போகும்'

என்று எனக்குத் தேவையான கவிதையையும் தந்திருக்கிறார்'' என்று கவிஞர் திரு. செல்லகணபதியைப் பாராட்டினார்கள். தமிழ்த் தொண்டர் திரு. லெ. இராமநாதன் கவிஞரின் பண்புகளைப் பாராட்டினர். கவிஞரின் வகுப்புத் தோழரான டாக்டர் திரு. தே. ஞானசுந்தரம், கண்டனூர் கவிஞர் பெருமகன் டாக்டர் திரு. அர. சிங்காரவடிவேலன் ஆகியோரும் நூலை விமர்சித்து உரையாற்றினார்கள். டாக்டர் திரு. அர. சி. அவர்கள் கவிஞரை 'கண்டனூர் வள்ளலார்' என்று சிறப்புப் பெயர் தந்து அழைத்தார்கள்.

குடமுழுக்கு விழா மலர்க் குழுத் தலைவர் 'இலக்கியச் சிந்தனை' திரு. ப. லெட்சுமணன் அவர்கள் தம் வரவேற்புரையில் ''இணை அமைச்சராக இருக்கும் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் தம்சீரிய பணியில் இணையற்ற அமைச்சராகப் பெயர் பெற்றிருப்பதை நாடு நன்கறியும்'' என்று குறிப்பிட்டார்கள். முன்னதாக ஓவியர்மணி சிவ. ராம. ஆவுடையப்பனின் மிகச் சிறந்த கண்ணாடி ஓவியத்தை மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சுபாபதி அவர்கள் திருக்கோவிலில் திறந்து வைத்து ஓவியரின் வளர்ச்சிக்கு வணிக ரீதியில் தங்கள் வங்கி துணை புரியும் என்றார்கள்.

கவிஞர் திரு. செல்லகணபதி தம் ஏற்புரையில் தன்வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் காரணமாகவும் இருந்து வரும் கண்டனூர் நகரத்தார் பெருமக்களை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். தம்மை சுவீகரித்துக் கொண்ட கண்டனூர் மக்களை இதய சிம்மாசனத்தில் அமர்த்தி முடிசூட்டிக் கொண்டிருப்பதாக நெகிழ்ச்சியுடன் பேசினார்.

தமது பெற்றோரையும் தனக்குக் கல்விக் கண் தந்தவரும் புத்தகத்தின் பதிப்பாளருமான திரு. செ. மெ. பழனியப்பச் செட்டியாரையும் நினைத்து நன்றிப் பெருக்குடன் ஏற்புரை வழங்கினார். புலவர் திரு. சோம. இராமலிங்கம் நன்றி கூறினார்.

உங்கள் குரல்

நகரத்தார் குரலைக் கண்டேன்
நலமெலாம் உளத்தில்
கொண்டேன்
சிகரத்தின் பெருமைசேர்க்கும்
சீரியநல் கருத்துச் செல்வம்
கவியரசர் தத்துவங்கள்
காலத்தின் முத்திரைகள்
லேனா (தமிழ்) வாணன் தந்த
இலட்சியப் பெட்டகங்கள்

— கவிஞர் கரு. கருப்பையா
கண்டரமாணிக்கம்

உதிரிப்பூக்கள் மாலையாகும் போது மேலும் வசீகரம் பெறுகின்றன - ஒரு தேர்ந்த கலைஞரின் கை வண்ணத்தினால்! நேரத்தைப் போற்றும் திரு. லேனா தமிழ்வாணனின் அரிய கருத்துக்கள் மேலும் சிறப்படைகின்றன — கோர்வையாகத் தொகுக்கப் பெற்றதனால்! பாராட்டுக்கள்.

சி. ஜம்புலிங்கம்
தேவகோட்டை

பிப்ரவரி இதழில் அம்மையும் அப்பனும் அருகருகே அமர்ந்து அருள் பாலிக்கும் காட்சி மிக அருமையாய் இருந்தது.

நாச்சம்மை பஞ்சநதம்
காரைக்குடி

நம் நாட்டில் அனைவரும் நேரத்தைப் பின்பற்றுததைச் சுட்டிக் காட்டியும் நேரத்தின் அருமை பற்றியும் திரு. லேனா தமிழ் வாணன்கூறியுள்ளதை சிறப்பாகத் தொகுத்து வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

வ. பழநிக்குமார்
கண்டவராயன்பட்டி

திரு. லேனா கூறியதோ நேரத்தின் அருமை; ''நகரத்தார் குரலிலோ செய்திகள் அருமை; கதம்பமோ புதுமை; அட்டைப் படம் இதழுக்குச் சேர்ப்பதோ பெருமை.

ராம. வ. இராமசாமி
கோட்டையூர்

பிப்ரவரி' 92 இதழில் 'செய்திகள் வாசிப்பவர்...' பகுதி முழுமையாக இரண்டு பக்கங்களைக் கொண்டுள்ளது. 'பாத்தோட்டம் கண்ணதாசன்' கவிதை தேனாக இனித்தது. ''கதம்பம்'' பகுதி, பல சுவையான செய்திகளைக் கொண்டுள்ளது. தொடரட்டும் நற்பணி.

வீர. கண்ணப்பன்
திருச்சி


அழகு

கண்ணுக்கு மை அழகு
கடலுக்கு அலை அழகு
பெண்ணுக்கு நகை அழகு
பெருமைக்குப் புகழ் அழகு
பட்டுக்கு இழை அழகு
பாட்டுக்குப் பொருள் அழகு
மூப்புக்கு நரை அழகு
முதுமைக்கு உயர்வழகு
சோப்புக்கு நுரை அழகு
சொல்லுக்குச் சொல் அழகு
— ஆம், தமிழ்ச்
சொல்லுக்குச் சொல்லே அழகு

— கவிஞர் கரு. கருப்பையா
கண்டரமாணிக்கம்

திருமணம்

தேனிபட்டி திரு. மு. அ. செல்லப்ப செட்டியார் புதல்வன் செல்வன் அழகப்பன் என்ற ரவிக்கும் கடியாபட்டி விஸ்வநாதபுரம் திரு. பழ. ப. அண. பழநியப்ப செட்டியார் புதல்வி செல்வி வள்ளிக்கண்ணுவுக்கும் 9–2–92 அன்று கடியாபட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



பெண் குழந்தைத் தாலாட்டு

— 'தமிழ்க் கடல்' இராய. சொக்கலிங்கம் —

மானே! மரகதமே! மாமயிலே! மாதரசே!
தேனே! திரவியமே! தீங்கனியே கண்வளராய்!

சோலை அருங்கிளியே! சுந்தரியே! தெள்ளமுதே!
காலைக் கதிரொளியே! கண்மணியே கண்வளராய்!

கோல மணிவிளக்கே! கோமளமே! கோகிலமே!
பாலைப் பழிக்கும் மொழிப் பாவையே கண்வளராய்!

குழலின் ஒலியதனைக் கோதாக்க வந்த
மழலை மிழற்றும் அரு மாமணியே! கண்வளராய்!

காந்தி அறமதனைக் காசினி ஏலாம்பரப்பப்
போந்த இளங்கொடியே! பொன்னே! நீ வளராய்!

கம்பர் தமிழின் கவியின் உயர் கருத்தை
இம்பர் வளர்க்கவரும் ஏந்திழாய் கண்வளராய்!

பாரதியார் பாட்டினுயர் பண்பை இப் பாரறியச்
சீரதாச் செப்புதற்குச் செல்வமே! கண்வளராய்!

தொல்காப் பியர்செய்த தொன்மையுடைச் சீர்நூலின்
ஒல்காப் பெருமை ஒளிபெற நீ கண்வளராய்!

சங்கத் தமிழினிய சால்புடைய நூலாய்ந்தே
எங்கள் தவம்விளக்க ஏதமிலாய்! கண்வளராய்!

பெண்ணைக் குறைவாகப் பேசும் நூற் கொள்கையெலாம்
மண்ணிற் புதைக்க வயிரியே! கண்வளராய்!

கணவன் பிழைபொறுத்த கண்ணகி போற் கற்பை
அணிகொள் பொறுமையோடு ஆள்வதற்குக் கண்வளராய்!

பெண்ணடிமை என்று சொலும் பேதைமட வார்தங்கள்
கண்திறக்க வந்தபெரும் கற்பகமே! கண்வளராய்

வேற்று நாடாள விழையும் மடக் கொள்கை
ஏற்றுள்ளார் புன்மை இடிய நீ கண்வளராய்!

சாதியால் மேல் கீழும் சாதிக்கும் வன் கண்ணர்
பேதையார் என்றறியப் பெண்ணரசே கண்வளராய் !
சிறக்கும் தமிழ் மொழியில் சீலம் செறிந்த
அறத்தை இனிதருளும் ஒளவையாள் நீ தானே !
மற்றேன் மனம் புகுதல் மாகமகட்கு என்றந் நாள்
சொற்ற மருதிளனும் தொல்மகளும் நீ தானே !
தீர்த்தன் அறம் வளர்த்த செல்வி எனும் எங்கள் சீர்ச்
சூடிக் கொடுத்த இளந் தோகையாள் நீ தானே !
பாடிக் கொடுத்தும் பரமன் அடியினைக்குச்
சூடிக் கொடுத்த இளந் தோகையாள் நீ தானே !
சீரைப் பார்த் துக் கணவன் செல்லத் தமிழ்பாடிக்
காரைக்கால் வந்தஉயர் காரிகையும் நீ தானே !
செங்கோன்மை நாட்டியே தென்பாண்டி நாடளித்த
மங்கையர்க்குப் பேரரசாம் மாதரசி நீ தானே !
தெள்ளு தமிழில் திறம்பா அறமுரைத்த
வள்ளுவனை ஈன்றெடுத்த மங்கை நல்லாள் நீ தானே !
செஞ்சொல் அமிழ்தால் சிலம்பை இசைத்த உயர்
அஞ்சொல் இளங்கோவின் ஆய்ச்சியாள் நீ தானே !

(செல்வி பதிப்பகம் வெளியிட்டுள்ள ''தாலாட்டு'' நூலிலிருந்து)

பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணம்

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவில் திருச்சி நகரத்தார் சங்கத்தின் முயற்சியில் பிள்ளையார்பட்டியில் 9-2-92 ஞாயிற்றுக்கிழமை காலையில் 14 ஆவது வரிசையில் மூன்று திருமணங்கள் சிறப்பாக நடைபெற்றன.

காளையார்மங்கலம் திரு. பழ. வயிரவன் செட்டியார் புதல்வி செல்வி கண்ணத்தாளுக்கும் (இளையாத்தக்குடி—பட்டினசாமி) காளையார்மங்கலம் திரு. அரு. சுப. மாதவன் செட்டியார் புதல்வன் செல்வன் இராமகிருஷ்ணனுக்கும் (சூரக்குடிக் கோவில்)—

காரைக்குடி முத்துப்பட்டணம் திரு. பழ. கு. ராம. சுப. அழகப்ப செட்டியார் புதல்வி செல்வி சுப்புலெட்சுமிக்கும் (பிள்ளையார் பட்டி) கடியாபட்டி விஸ்வநாதபுரம் திரு. சு. சோ. வைத்தியநாதன் என்ற முத்துச் செட்டியார் புதல்வன் செல்வன் செந்தில்குமாருக்கும் (வயிரவன் கோவில்-பிள்ளையார் வகுப்பு)—

கடியாபட்டி விஸ்வநாதபுரம் மேற்படி திரு. வைத்தியநாதன் என்ற முத்துச் செட்டியார் புதல்வி செல்வி சின்னம்மாள் என்ற செல்விக்கும் (வயிரவன் கோவில்-பிள்ளையார் வகுப்பு) காரைக்குடி முத்துப்பட்டணம் மேற்படி திரு. அழகப்ப செட்டியார் புதல்வன்

எமது நல்வாழ்த்துக்கள் !

ஓரியண்ட் PVC பைப்ஸ்
அருண் HDPE பைப்ஸ்

orient
RIGID PVC PIPES

ARUN
HDPE PIPES

விவசாயம், தொழிற்சாலை, போர்வெல் மற்றும் வீட்டு உபயோகங்களுக்கு சிறந்த PVC & HDPE பைப்புகள்

- விலை குறைவு.
- தரம் உயர்வு.
- நீடித்த உழைப்பு.
- ISI பைப்புகளுக்கு நிகரானவை.



தயாரிப்பாளர்கள் :
சேலம் பைப்ஸ் (பி) லிமிடெட்,
27, சேலம் கூட்டுறவு தொழிற்பேட்டை லிட்,
உடையாப்பட்டி, சேலம்-636140.
☎ 68717

கிடைக்குமிடம் :
சேலம் பைப் டிரேடர்ஸ்,
4, சிட்டுக்கோவில் தெரு,
சேலம்-636001.
☎ 65038, 67941

Sales Depot :

Salem Pipes (P) Ltd.,
Kings Complex
343, Dr. Nanjappa Road,
Coimbatore - 641 018
Phone : 36946

செல்வன் குமரப்பனுக்கும் (பிள்ளை யார்பட்டி) —

ஆக மூன்று திருமணங்கள் சிறப்பாக நிகழ்ந்தன.

வாழ்த்தரங்கம்

திருமண நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடைபெற்ற வாழ்த் தரங்கத்திற்கு திருச்சி நகரத்தார் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். ஓ. ஆர்எம். கணபதி செட்டியார் அவர்கள் தலைமை ஏற்க, அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தின் முன் னாள் துணைவேந்தர் திரு. இராம. சேதுநாராயணன், வழக்கறிஞர் திரு. சொ. மெய்யப்பன், திருச்சி சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் திரு. ஆ. வி. க. ஆவிச்சி செட்டி யார் திரு. சு. அ. அரு. பழநி யப்ப செட்டியார், திரு. லெ. நா. லெட்சுமணன் ஆகியோர் வாழ்த் துரை வழங்கினர்.

திருச்சி சங்கத்தின் துணைத் தலைவர் திரு. மெ. அடைக்கல வன் நன்றி கூறினர்.

திருச்சி நகரத்தார் சங்கம் திருச்சியில் தனியாக 19 திருமணங்களையும் பிள்ளையார் பட்டியில் கூட்டுத் திருமணங் களாக 68 திருமணங்களையும் இது வரை நடத்தி வைத்துப் பெரும் புண்ணியத்தைத் தேடிக் கொண் டுள்ளது.

திருமணம்

கவிஞர் திரு. மீனவன் மகள் விசாலாட்சிக்கும் கொத்தமங்கலம் அண. லெட்சுமணன் செட்டியார் மகன் லெட்சுமணனுக்கும் காரைக்குடியில் 10–2–92 அன்று திருமணம் சிறப்பாக நிகழ்ந்தது.

வாழ்த்தரங்கிற்கு காசி ஸ்ரீ அரு. சோம. சுந்தரன் தலைமை தாங்கினர். பேராசிரியர் நா. சுப்பிரமணியன் வரவேற்றார். வித்துவான் அழகப்ப செட்டியார், முதல்வர் முருகசாமி, கவிஞர் அழ. அண்ணாமலை, ஆண்டியப்பன் ஆகியோர் வாழ்த்தினர். திரு. மீனவன் நன்றி கூறினர்.



நாகப்பட்டினத்தில் 16—2—92 அன்று நகரத்தார் சங்கத்தைத் தொடங்கிவைத்து 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் உரையாற்றும் காட்சி. அருகே பேராசிரியர் டாக்டர் திரு. ச. மெய்யப்பன், தலைவர் திரு, நா, அண்ணாமலை செட்டியார், திரு. ஆவி. க. ஆவிச்சி செட்டியார், திருமதி உமையாள் முத்து ஆகியோர் உள்ளனர்.

நாகபட்டினத்தில் சங்கம் துவக்கம்

நாகபட்டினத்தில் 16-2-92 ஞாயிறு மாலை டி. பி. ஜி. திரு மண மண்டபத்தில் நகரத்தார் சங்கத்தின் தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

திரு. ராம. சுப. இராமநாதன் இறைவணக்கம் பாடினார். சங்கத்தின் தலைவர் திரு. நா. அண்ணாமலை செட்டியார் வரவேற்புரை நிகழ்த்த 'மீனாட்சி திரு மைந்தன்' திரு. வி. என் சிதம்பரம் செட்டியார் விழாவினைத் தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து முனைவர் திரு. ச. மெய்யப்பன் திருமதி. உமையாள்முத்து திரு. அரு. சொக்கலிங்கம், குமாரி மீனாட்சி, திரு. கும. கரு. ராம. சொக்கலிங்கம் செட்டியார் (மன்னார்குடி சங். தலைவர்) திரு. சிதம்பரம் மயில்வாகனன் திரு. இராஜமுகுருபாண்டியன் திரு. ஆவி. க. ஆவிச்சி செட்டியார் ஆகியோர் உரையாற்றினர்கள்.

விழாவில் குழந்தைகளின் மாறுவேடப் போட்டி இடம் பெற்றது. விழா நிகழ்ச்சிகளை திரு. எஸ். அருண் தொகுத்து வழங்கினார். செயலாளர் திரு. பழ. சீனிவாசன் நன்றி கூறினார்.

ஃ காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியின் ஆண்டு விழா 20-2-92 & 21-2-92 ஆகிய இரு தினங்களும் கொண்டாடப் பெற்றது.

முனைவர் வெ. மாணிக்கவாசகம்

முனைவர் திரு. வெ. மாணிக்கவாசகம் நாட்டரசன் கோட்டை திரு. வீர. ஆ. ராம. வெங்கடாசலம் செட்டியார் – திருமதி சொர்ணவல்லி ஆச்சியின் நான்காவது புதல்வராவார். சூரக்குடிக் கோயிலைச் சேர்ந்த இவர், வணிகவியலில் முதுநிலைப் பட்டமும் (M. Com.) ஆய்வு முது நிலைப் பட்டமும் (M. Phil) கல்வியியலில் முதுநிலைப் பட்டமும் (M. Ed.) வணிகவியலில் முனைவர் பட்டமும் (Ph. D.) பெற்றவர்.

பள்ளி இறுதி வகுப்பில் பள்ளியில் முதல் தகுதி பெற்று மாவட்டத்தில் விருப்பப் பாட வரலாற்றில் முதல் மாணாக்கராகத் திகழ்ந்து பரிசு பெற்றார். புகுமுக வகுப்பு, இள வணிகவியல், முது வணிகவியல் ஆகியவற்றில் கல்லூரியில் முதல் மாணாக்கராகத் திகழ்ந்து தங்கப் பதக்கங்கள் பெற்றார். இவரது கல்வித் தேர்ச்சிக்காக அரசு தேசிய நன் மதிப்பெண்பெறும் மாணவருக்கான உதவித்தொகைக்கு தேர்த்தெடுத்து இவருக்கு அதனை வழங்கியது.

இவர் தேவகோட்டை தே பிரித்தோ மேனிலைப் பள்ளியில் முது வணிகவியல் பட்டதாரி ஆசிரியராக ஓராண்டு பணியாற்றினார். அதன் பிறகு மதுரை சரசுவதி நாராயணன் கல்லூரியில் வணிகவியல் உதவிப் பேராசிரியராக சுமார் ஐந்தரை ஆண்டுகள் பணிசெய்து தற்பொழுது காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் நிறுமச் செயலரியல் (Corporate Secretaryship) துறையில் முது விரிவுரையாளராக (Senior Lecturer) கடந்த நான்கு ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்.

'நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் பணியாளர் ஒழுங்குணர்வு' (Employee Morale in N. L. C. Ltd.) என்ற தலைப்பில் ஆய்வு செய்து வணிகவியலில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்த இவருக்கு சென்ற ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. தற்சமயம் பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் படைத்து வருகின்றார்.



இவரது துணைவியார் திருமதி நாச்சம்மை அரண்மனை சிறுவயல் திரு உ. கண்ணப்ப செட்டியார் – திருமதி மீனாட்சி ஆச்சியின் புதல்வியாவார் இவருக்கு ஒரே மகள். பெயர்: உமையாள். தற்சமயம் அழகப்பா ஆயத்தப் பள்ளியில் மூன்றும் வகுப்புப் படித்து வரும் இவள் சமஸ்கிருத ஸ்லோகம் ஒப்புவித்தல் போட்டியில் முதல்பரிசு பெற்றவர். கலாமடம் - பாதரக்குடி சுவாமிகளிடம் சமஸ்கிருதமும், காரைக்குடி திருமதி ஜெயமணி

நரசிம்மன் அவர்களிடம் வாய்ப் பாட்டு சங்கீதமும் இவள் பயின்று வருகிறாள். இவள் புட்டபர்த்தி சாயிபாபா சுவாமிகளின் பக்தை யாவாள். பெங்களூர் சென்று சுவாமிகளை தரிசனம் செய்தும் வந்திருக்கிருள்.

டாக்டர் மாணிக்கவாசகம் தனது பணியில் மேலும் பல முன் னேற்றங்களைப் பெற்று உயர்ந்த நிலைக்கு வளர ''நகரத்தார் குரல்'' வாழ்த்துகிறது.

உத்தமர்கள்

கணவனின் கட்டளைக்குப் பணிந்து நடக்கும் மனைவி; தாய் தந்தையரின் உள்ளத்தை மகிழ்விக்கும் மகன்; தன்னுடைய சுக துக்கம்போல் அடுத்தவன் சுக துக்கத்தைக் கருதும் மனமுள்ள நண்பன் இவர்களே உத்தமர்கள் ஆவர்!

-- வாரியார்

NOTICE

Form IV

(See Rule 8)

Statement of ownership and other particulars about "NAGARATHAR KURAL" Monthly, Madurai.

1. Place of Publication	:	20 Krishnapuram 4th Cross Street, Madurai-625 009.
2. Periodicity of its Publication	:	Monthly
3. Printer's Name	:	A. Palaniappan
Nationality	:	Indian
Address	:	Expo Printers 20, Krishnapuram 4th Cross Street Madurai-625 009.
4. Name of Editor	:	V. N. Chidambaram
Nationality	:	Indian
Address	:	21, Kamala 2nd Street Chinna Chokkikulam Madurai-625 002.
5. Name and address of Publisher & Owner	:	SP. A. Nadarajan Plot No. 377 Anna Nagar Madurai-625 020.

I. SP. A. Nadarajan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 29—2—92

(Sd) SP. A. Nadarajan
PUBLISHER

அழகப்ப செட்டியாருக்கு 'அருட்பணி அண்ணல்' பட்டம்!

கலாமடம்-பாதரக்குடி ஆதீன கர்த்தர் தவத்திரு இரவீந்திர சுவாமிகளின் 37 ஆவது ஜெயந்தி விழா பாதரக்குடி மடாலயத்தில் 26-12-91 அன்று சிறப்பாக நடைபெற்றது.

இவ் விழாவில் கோட்டையூர் அழகாபுரியைச் சேர்ந்த ஆன்மீகப் பெரியவர் வீர. அழ. அ. அககப்ப செட்டியார் அவர்களுக்கு தவத்திரு இரவீந்திர சுவாமிகள் 'அருட்பணி அண்ணல்' என்னும் பட்டத்தினை வழங்கிப் பொன்னாடை போர்த்தி திருநீறு வழங்கி அருளினர்கள்.

அழகப்ப செட்டியார் அவர்களைப் பாராட்டி கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசி விசுவநாத ஞானதேசிக சுவாமிகள், தவத்திரு இரவீந்திர சுவாமிகள் திரு. சோம. நாராயணன் செட்டியார் இரசிகமணி திரு. ஆர் எம். சிதம்பரம் செட்டியார், புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் காசிஸ்ரீ திரு. அரு. சோ. கவிஞர் திரு. நா. மீனவன் ஆகியோர் உரையாற்றினர்.

ஆண்டு தோறும் பாதரக்குடி மடாலயத்தில் ஜெயந்தி விழாவன்று தக்க பெரியவர்களுக்கு 'அருட்பணி அண்ணல்' பட்டம் வழங்கப்படும் என திரு. சோம. நா. அறிவித்தார்கள்.

ஜெயந்தி விழாவுக்கு ஆண்டு தோறும் ஒரு மூட்டை அரிசிக்கு ரூ. 401-00 வீதம் நன்கொடை அளிப்பதாக இரசிகமணி திரு. ஆர்எம். சிதம்பரம் செட்டியாரும் திரு. வீர. அழ. அ. அழகப்ப செட்டியாரும் தெரிவித்துள்ளனர்.

ஓ. சிறுவயலில் கலை, இலக்கிய விழா

ஓ. சிறுவயலில், தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பில் கலை, இலக்கிய விழா 10-5-92 & 11-5-92 (ஞாயிறு, திங்கள்) ஆகிய இருதினங்கள் நடைபெறுகிறது. விழாவில் மத்திய வணிகத் துறை இணை அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் தமிழக அமைச்சர் திரு. எஸ். ரகுபதி 'கண்ணதாசன் புகழ்க் காவலர்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி உயர்திரு. அரு. லெட்சுமணன் ஆகியோர் பங்கு பெறுகிருர்கள். விழாவில் அம் மன்றத்தின் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற எல். சண்முகம் செட்டியாரின் படம் திறந்து வைக்கப் பெறுகிறது. பேராசிரியர் திரு. கண. சிற்சபேசன் தலைமையில் பட்டிமண்டபமும் முனைவர் திரு. அர. சிங்காரவடிவேலன் தலைமையில் கவியரங்கமும் நிகழவிருக்கின்றன. இத் தகவல்களை 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன் தெரிவித்தார்.

ஃ கோவிலூர் ஆதீனத்தில் சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் 'வேதாந்தம் — சித்தாந்தம்' என்ற தலைப்பில் 15-2-92 அன்று திரு. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார் உரை நிகழ்த்தினர்.

91



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் திரு. கே. நாகப்ப செட்டியார் – பேராசிரியை திருமதி நா. மீனாட்சி ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 9-3-92 திங்கட்கிழமை பகல் 12-00க்கு மேல் 12-30 மணி அளவில் பிள்ளையார்பட்டியில் நடைபெறவிருக்கிறது.

ஃ கோவிலூர் ஆதீனத்தில் சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் 14-3-92 சனிக்கிழமை காலை "ஸ்ரீ மீனாட்சி திருக்கோவில்" என்ற தலைப்பில் பேசவிருக்கிறார்கள்.

ஃ "சண்டே டைம்ஸ்" என்கிற ஆங்கில ஏட்டையும் "ஹிந்துஸ்தான்" என்கிற தமிழ் ஏட்டையும் முதன் முதலாக நடத்தியவர் கொத்தமங்கலம் ராம. சுப. இராமன் செட்டியார் அவர்கள்.

ஃ கவிஞர் திரு. சிவல்புரி சிங்காரத்தை ஆசிரியராகக் கொண்டு "நல்ல நேரம் வந்தாச்சு" என்ற எண் கணித மாத இதழ் ஒன்று மதுரையிலிருந்து வெளிவர இருக்கிறது.

ஃ மதுரை தமிழ் இசைச் சங்கத்தின் 17ஆவது ஆண்டு தமிழ் இசை விழா 21-2-92 முதல் 27-2-92 வரை சிறப்பாக நடைபெற்றது.

ஃ பிரபல தொழிலதிபரும் ஸ்பிக் நிறுவத்தின் துணைத் தலைவருமான திரு. ஏ. சி. முத்தையாவுக்கு அண்ணா பல்கலைக் கழகம் 17-2-92 அன்று தனது 12 ஆவது பட்டமளிப்பு விழாவில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

ஃ வலையபட்டி சிதம்பரம் மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்

பள்ளியின் 12 ஆவது ஆண்டு நிறுவனர் நாள் 18–2–92 அன்று கொண்டாடப் பெற்றது.

ஃ காரைக்குடியில் 17, 18 & 19–3–92 ஆகிய மூன்று தினங்களும் நாட்டரசன்கோட்டையில் 20–3–92 அன்றும் கம்பன் திருநாள் கொண்டாடப்படவிருக்கிறது.

ஃ பழநிக் காவடிகள் காரைக்குடிக்குத் திரும்பி வந்தபோது அரண்மனைப் பொங்கல் திரு. குமரப்ப ஐயா மற்றும் காவடிகளுக்கு நகரத்தார் சார்பிலும் காரைக்குடி நகரத்தார் நற்பணி மன்றத்தின் சார்பிலும் சிறப்பான வரவேற்புக் கொடுக்கப்பட்டது.

ஃ காரைக்குடியில் 12-2-92 அன்று நடைபெற்ற சுழற்குழுக் கூட்டத்தில் திரை நட்சத்திரங்கள் ஜெய்சங்கர், எஸ். எஸ். சந்திரன், சங்கிலிமுருகன், ஒய். விஜயா ஆகியோர் சுழற் குழுத் தலைவர் திரு. முத்துப்பழநியப்பன் செயலாளர் திரு. வயி. கருப்பன் செட்டி முன்னிலையில் ''இவர்கள் சந்தித்தால்'' என்ற தலைப்பில் உரையாற்றினர்.

ஃ சென்னை கந்தர் சஷ்டி விழாக் கழகத்தின் செயலாளர் திரு. எம். அன்புமணியின் துணைவியார் திருமதி அன்புமீனாள் சென்னை முகப்பேர் மேற்கு பொன்மலர் பெண்கள் சங்கத்தின் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஃ சென்னை, திருவொற்றியூர் மாசி மக விழாவினை யொட்டி கண்ணதாசன் கழகத்தார் நடத்திய இலக்கியக் கூட்டத்தில் ''பட்டினத்தார் வாழ்வும் வாக்கும்'' என்ற தலைப்பில் திரு. பழ. கருப்பையா உரையாற்றினார்.

ஃ கல்வி கோபாலகிருஷ்ணன் எழுதி உமாபதிப்பகம் வெளியிட்டுள்ள ''தாவரத்தாய்'' என்ற நூலுக்கு இந்தியக் குடியரசுத் தலைவரின் பரிசும் பாராட்டும் கிடைத்துள்ளது.

வி. என். சிடி. க்குப் புதிய பட்டம்!

கவியரசு கண்ணதாசன் நற்பணிமன்றத்தின் சார்பில் காரைக்குடியில் 22-2-92 அன்று நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் நமது இதழின் ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கு 'கண்ணதாசன் புகழ்க் காவலர்' என்ற புதிய பட்டத்தினை திரைப்பட இயக்குனர் திரு. எஸ்பி. முத்துராமன் வழங்கினார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் திரு. கே. நாகப்பன் தலைமையில் நடைபெற்ற இப் பாராட்டு விழாவில் முன்னதாக மாநிலப் பொதுச் செயலாளர் 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன் வரவேற்றுப் பேசினார். முனைவர் திரு. கே. நாகப்பன் திரு. வி. என். சிடி. க்குப் பொன்னாடை அணிவித்தார்.

குழந்தை இலக்கியத்திற்கு முதல் பரிசு பெற்ற கவிஞர் திரு.

உ சிவமயம்

வட இந்திய காசி யாத்திரை

24-3-92 முதல் 16 நாட்கள்

டெல்லி - ஆக்ரா - சிக்கந்ரா - மதுரா - பிருந்தாவனம் - ஜெய்ப்பூர் - பதேபூர்சிக்ரி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - காசி - சாரநாத் - அலகாபாத் (திரிவேணி) - கயா - புத்தகயா.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து 24-3-92உ புறப்படுகிறது. III டயர் (தூங்கும் வசதி) ரயில் கட்டணம், சாப்பாடு, ஊர் சுற்றிப் பார்க்கும் சிலவு உள்பட நபர் 1க்கு ரூ. 2100/-

24-3-92 முதல் 18 நாட்கள்

டெல்லி - ஆக்ரா - சிக்கந்ரா - மதுரா - பிருந்தாவனம் - ஜெய்ப்பூர் - பதேபூர்சிக்ரி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - காசி - சாரநாத் - அலகாபாத் (திரிவேணி) - கயா - புத்தகயா - பம்பாய்.

III டயர் (தூங்கும் வசதி) ரயில் கட்டணம், சாப்பாடு, ஊர் சுற்றிப் பார்க்கும் சிலவு உள்பட நபர் 1க்கு ரூ. 2500/-

நபர் 1க்கு ரூ. 750/- வீதம் அட்வான்ஸ் செலுத்தி டிக்கட் பதிவு செய்யவும்.

வடஇந்திய யாத்திரை 18-4-92உயில் 16 நாட்கள், 21 நாட்கள் புறப்படுகிறது.

2-5-92 முதல் 12 நாட்கள்

டெல்லி - ஆக்ரா - மதுரா - சிம்லா - நபர் 1க்கு ரூ. 1800/-

2-5-92 முதல் 16 நாட்கள்

டெல்லி - ஆக்ரா - மதுரா - சிம்லா - பம்பாய் - நபர் 1க்கு ரூ. 2100/-

9-5-92 முதல் 18 நாட்கள் : பத்ரி, கேதார், காசி யாத்திரை

9-5-92 முதல் 23 நாட்கள் : பத்ரி, கேதார், காசி யாத்திரை

முழு விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

சபரிமலைப் பயணம், பங்குனி மாதப் பிறப்பு, பங்குனி உத்திரம், சித்திரை மாதப் பிறப்பு, சித்திரை விஷு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

SRI MURUGAN TRAVEL AGENCY MADURAI

ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

9. வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-1. 31169

செல்லகணபதிக்கு முனைவர் திரு. கே. நாகப்பன் இவ் விழாவில் பொன்னாடை அணிவித்தார். இயக்குநர் திரு. எஸ்பி. முத்து ராமனுக்கும் பொன்னாடை அணிவித்தார்.

முனைவர் திரு. கே. நாகப்பன் தலைமை உரையாற்றுகையில் திரு. வி. என். சிடி.யை தனக்கு 40 ஆண்டுகளாகத் தெரியுமென்றும் அவருக்குத் தனது இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கவிஞர் திரு. செல்லகணபதியை தான் 'செல்லத் தம்பி' அன்று அழைப்பதாகவும் அவருடைய கவிதையில் கருத்துச் செறிவு இருக்குமென்றும் குறிப்பிட்டார்.

மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன் வரவேற்புரை நிகழ்த்துகையில் கண்ணதாசன் புகழைப் பரப்ப திரு. வி. என். சிடி. அவர்கள் பல திட்டங்களை வகுத்துத் தந்திருப்பதாகவும் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் சேவையில் அவர்கள் பெருமை சேர்ந்தவர்கள் என்றும் பல்கலைக் கழகத் துணை வேந்தரின் அங்கீகாரத்தோடு அவர்களுக்கு இப் பட்டம் வழங்கப் பெறுவதாகவும் அறிவித்தார்.

இப் பாராட்டு விழாவில் திரைப்பட இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமன், கம்பன் அறநிலைப் பொருளாளர் திரு. ஏஎல். திருநாவுக்கரசு, காரைக்குடி நக. நற்பணி மன்றத் தலைவர் திரு. பி. எஸ். ஆர்எம். இராமசாமி ஆகியோர் பங்கு கொண்டு பாராட்டிப் பேசினர்.

கவிஞர் திரு. செல்லகணபதி, திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் ஏற்புரை வழங்க, திரு. எம். இராமதாஸ் நன்றி கூறினர்.

இலுப்பைக்குடியில் மணி விழா

தேவகோட்டையைச் சேர்ந்தவரும் நடிகர் திரு. கமலஹாசனின் நேர்முகச் செயலாளரும் சென்னை ராஜ்கமல் பிலிம் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் தயாரிப்பு நிர்வாகியுமான திரு. D.N. சுப்பிரமணியம் செட்டியார் - திருமதி அலமேலு ஆச்சியின் 60ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா 11-2-92 அன்று இலுப்பைக்குடி நகரக்கோவிலில் சிறப்பாக நடைபெற்றது.

மணி விழாவில் நடிகர் திரு. கமலஹாசன், திரு. சிவாஜியின் மூத்த புதல்வர் திரு. ராம்குமார், திரைப்படத் தயாரிப்பாளர் திரு. கே ஆர். சடையப்ப செட்டியார் இயக்குநர் திரு. எஸ் பி. முத்துராமன், திரு. பஞ்சு அருணாசலம், திருமதி பஞ்சு அருணாசலம், திரு. கங்கை அமரன், திரு. ஏவி எம். சரவணன், நடிகர் திரு. சங்கிலி முருகன் போன்ற திரை உலகப் பிரமுகர்களும் நகரத்தார் பெருமக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

கவிஞர் திரு. பெரி. சிவனடியான் வாழ்த்துக் கவிதை வாசித்தளித்தார்.

மணி விழாவிற்கு வருகை தந்தவர்களை திரு. D. N. சுப்பிரமணியத்தின் புதல்வர்கள் திரு. சந்திரமூர்த்தி, திரு. கணேஷ், திரு. முத்துக்குமார் வரவேற்று உபசரித்தனர்.

நகரத்தார் திருமண முறைகள்

தொகுப்பு : A. K. கிருஷ்ணன் B. Sc.

— 4 —

அழகு ஆலத்தி

மணமகன் மணம் புரிந்து கொள்ள தன் வீட்டில் இருந்து புறப்படும் பொழுது மணமகனுக்கு அப்பத்தாள் (தந்தையாரின் தாய்) மணமகனை நடு பத்தியில் கோலத்திற்கு முன் நிறுத்தி அழகு ஆலத்தி எடுத்து வழியனுப்பி வைப்பார்கள்.

மாப்பிள்ளை அழைப்பு

மணமகன் வீட்டார் ஒரு பெரிய தாம்பாளத்தில் மணமகனுக்கு அணிவிக்கின்ற உடைகள், மாலைகள், நகைகள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு மணமகன் தங்கி இருக்கும் இடத்திற்கு மேளம் முழங்க, சங்கு ஒலிக்கச் செல்வர். மணமகள் வீட்டு உறவினர்கள் ஊர்வலமாகப் பின் வருவார்கள்.

பூ மணம் இட மாப்பிள்ளை வீட்டுக்கு முன் கூட்டியே சொல்லி விடவேண்டும்.

அரிமணமிடுதல்

மணமக்களை நெல்லும் பூவும் எடுத்து நீரில் நனைத்து பெரியவர்கள் வாழ்த்துதலை அரிமணமிடுதல் என்று அழைப்பார்கள்.

''நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங்கதுப்பின் நெல்லொடு தயங்க''
— அகநானூறு

சடங்குத் தட்டு

சடங்குத் தட்டு 7 கிண்ணங்

களைக் கொண்டது.

1) பிள்ளையார் வெற்றிலை பாக்கு, 2) மஞ்சள், 3) திருநீறு, 4) பச்சரிசி, 5) உப்பு, 6) புளி, 7) பஞ்சு.

1) நிறைநாழ், 2) சிலேட்டு விளக்கு, 3) பிள்ளைக் குழவியைப் பட்டில் வைத்துப் பெண் கையில் சுற்றிக் கொடுத்துச் சடங்கு செய்ய வேண்டும்.

முளைப்பாலிகை

இதை மூன்று நாட்களுக்கு முன்பே தயார் செய்ய வேண்டும். மணமகன்வீட்டில் முளைக்கும் திற னுள்ள நெல், உழுந்து, துவரை, பாசிப்பயிறு, மொச்சை, பருத்தி, கேப்பை, ஆகிய தானியங்களை தலா ஒரு உழக்கு வீதம் ஒரு தவலையில் போட்டு ஊரணித் தண்ணீர் ஊற்றி வைக்க வேண் டும். பிறகு அந்தத் நண்ணீரை வடித்துவிட்டு வேறு தண்ணீர், ஊற்றி வைக்க வேண்டும். திரும ணத்திற்கு முதல் நாள் ஒரு பாத் திரத்தில் சிகப்புத் துணியை வைத்து அதில் இந்தத் தானியங் களை வைத்து இறுகக் கட்டி வைக்கவேண்டும். இப்படிச் செய் யும் பொழுது அவை முளை விட்டி ருக்கும். அதில் ஒரு பகுதியை மண மகள் வீட்டுக்குக் கொடுத்து விட வேண்டும். திருமணத் தம்பதி யரும் அவர்கள் குடும்பத் தாரும் முளைவிட்டுப் பல்கிப் பெருகி வாழவேண்டுமென்பதே இதன் நோக்கம். உப்புக் கடகம், ஏட்டோலை முதலியவற்றுடன் முளைத்திரவியத்தையும்கொண்டு போக வேண்டும்.

கோட்டை கட்டுதல்

ஒரு மரக்கால் நெல்லை உள்ளே வைத்து வைக்கோல் பிரியால் பந்து போலக் கட்டுதல். இதை திருப்பூட்டப் போகையில் மணமகள் வீட்டுக்கு எடுத்துப் போக வேண்டும். அதை சாமி வீட்டில் நடுவில் வைப்பார்கள். மணமகன் அரசாணிக்கால், அக் கினி ஆகியவற்றை வலம் வந்த வுடன் இந்தக் கோட்டையைத் தாண்டி சாமி வீட்டிற்குள் செல்ல வேண்டும்.

திருப்பூட்டுதல்

மணமகளுக்கு மணமகனின் தாயார் கொண்டு வந்த ஆடை களை அணிவித்து நன்கு அலங் கரித்து மணமேடை மீது கிழக்கு முகமாக நிற்கச் செய்வார்கள், பின்னர் மணமகனை அழைத்து வந்து மணமகளுக்கு எதிரே நிற் கச் செய்வார்கள்.

மணமகளின் கைகள் இரண் டையும் ஏந்தச் செய்து அதில் தேங்காய், வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பச்சரிசி முதலியவற்றைக் கொடுப்பார்கள். முதலில் மண மகன் திருவருளை நினைவில் நிறுத்தி கோவிலிலிருந்து வந் துள்ள திருநீற்றை தான் பூசிக் கொண்டு, மணமகள் நெற்றியி லும் பூசவேண்டும். பிறகு கோவில் மாலையை மணமகள் கழுத்தில் அணிவிக்க வேண்டும்.

பெரியவர் ஒருவர் எடுத்துத் தருகின்ற கழுத்துஉருவை மேல் பாதத்தில் திருமால்யம் உள்ள பகுதி வருமாறு மணமகளின் கழுத்தில் அணிவித்து மூன்று முடிச்சுகள் போடவேண்டும். அப் பொழுது கெட்டி மேளம் வாசிப் பார்கள். பிறகு சிறு தாலியை அணிவிக்க வேண்டும். அதன் பின் னர் திருமாங்கல்யத்திலும் மூன்று

முடிச்சுகளில் மேலும் சிறு தாலி யிலும் மஞ்சள் தொட்டு வைத்து குங்குமம் இடவேண்டும்.

பின் பெண்ணின் கையில் கொடுத்துள்ள தேங்காய் வெற்றி லை வகையறாவைத் தாம்பாளத் தில் வைக்கச் சொல்ல வேண்டும். இருவரும் மூன்று முறை மாலை மாற்றிக் கொள்வார்கள். மண மகன்தான் முதலில் மாலையிடு வார். பிறகு பெரியவர்களிடம் தம்பதியர் ஆசீர்வாதம் பெறுவர். திருப்பூட்டுதல் நிறைவேறியதும் இசைவு பிடிமானம் எழுத வேண் டும்.

இசைவு பிடிமானம்

திருமங்கல நாண் பூட்டிய தும். மணமக்களின் தந்தையார் இருவரும் நடுவீட்டில் அமர்ந்து இசைவு பிடிமானப் பத்திரத்தில் கையொப்பம் இடுவார்கள்.

திருமாங்கல்யம் கட்டினால் மட்டும் கூட நகரத்தார் திருமணம் சட்டப்படியோ அல்லது சாஸ்தி ரப்படியோ முழுமை அடைவ தில்லை. இந்த இசைவு பிடிமானத் தில் கையொப்பம் இட்ட பின்னர் தான் நகரத்தார் திருமணம் செல்லுபடியாகும். இந்தப் பத்தி ரத்தை திருமணத்திற்கு முதல் நாளே தயார் செய்து வைத்திருப் பார்கள்.

இதில் மணமகன் பெயர் மணமகன் தந்தை பெயர், மண மகள் பெயர், மணமகள் தந்தை பெயர் ஆகியவைகள் உரிய இடத் தில் குறிப்பிடும் வகையில் அச் சிடப்பட்ட படிவமாக இருக்கும்.

இதில் மேலும் நாடு, கோவில், கோத்திரப் பிரிவு போன்றவை களும் சரியான இடத்தில் குறிக் கப்படும். கொடுக்கப்படும் நகைகள் பாத்திரங்களும் தவறா மல் குறிப்பிடப்பட்டிருக்கும்.

திருப்பூட்டிய சடங்கு

திருப்பூட்டி முடிந்ததும் தொடர்ந்து திருப்பூட்டிய சடங்கு நடைபெறும்.

ஒரு சடங்குத் தட்டில் ஏழு கிண்ணங்கள் இருக்கும். ஒன்றில் பிள்ளையாரும் வெற்றிலை பாக் கும் இருக்கும். மற்ற ஆறு கிண் ணங்களில் முறையே மஞ்சள், விபூதி, பச்சரிசி, உப்பு, புளி,

பஞ்சு போன்றவைகள் இருக்கும்.

ஒருபடி நிறைய நெல் நிரப்பி அதன்மேல் ஒரு கத்திரிக்காயை வைத்திருப்பார்கள். இதை நிறைய நாழி என்று அழைப்பார்கள். ஒரு கெண்டிச் செம்பில் நீர் நிறைத்து வைத்திருப்பார்கள்.

மணமகளை மணையின் மீது கிழக்கு முகமாக நிற்கவைத்து மாமியாரும் பின் நாத்தியும் சடங்கு செய்வர். பனை ஓலை தடுக்குப் போட்டு நின்று கொள்வர். சடங்குத் தட்டில் உள்ள விபூதியை எடுத்து தானும் பூசிக் கொண்டு பிறகு மணமக்களுக்கும் பூசி விடுவர். இவ்வாறு ஒவ்வொரு கிண்ணத்தையும் மூன்று மூன்று முறைகள் தொட்டு மொத்தம் 21 முறைகள் விபூதி பூசிக் கொண்டு மணமகளுக்கும் பூசி விடுவர்.

பிறகு நீர் நிறைந்த கெண்டிச் செம்பை வலது கரத்தில் எடுத்துக்கொண்டு மணமகள் கையில் வெற்றிலையைக் கொடுத்து தண்ணீரை அதன்மேல் சிறிது சிறிதாக ஊற்றி அந்த நீர் மணமகளின் பாதங்களில் விழுமாறு பார்த்துக்கொள்வார்கள். பிறகு மணமகளை இரு கைகளாலும் அந்த வெற்றிலையை நெற்றியில் வைத்து வணங்கச் சொல்வார்கள்.

மணவறைச் சடங்கு

வினாயகர் பூசை-வர்ணகும்ப பூசை, அக்கினி வளர்த்து, நவக்கிரக ஓமம் – பூமணம் அரிமணம் இடுதல், மணமிடுதல் முதலில் மாமக்காரரால் செய்யப்பெறும்.

(அடுத்த இதழில் முடியும்)

"எங்கள் போதாத காலம்!"

ஒரு பள்ளி ஆசிரியர் ஒரு மாணவனைப் பார்த்து கேள்வி கேட்டுக் கொண்டே வந்தார். அவனும் தயங்காமல் பதில் கூறிக் கொண்டே வந்தான்.

ஆசிரியர் : அக்காள் வந்தாள் என்பது என்ன காலம்?
மாணவன் : இறந்த காலம்.

ஆ : அக்காள் வருகிறாள்?
மா : நிகழ் காலம்.

ஆ : அக்காள் வருவாள்?
மா : எதிர் காலம்

ஆ : அக்காள் குழந்தை பெற்றாள்?
மா : பேறு காலம்!

ஆ : ஆசிரியர் பாடம் நடத்துகிறார்?

மா : அது எங்கள் போதாத காலம்!

(காரைக்குடியில் 22-2-92 அன்று நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் பேராசிரியர் திரு. பாஸ்கர பாண்டியன் கூறியது)

காரைக்குடியில் இலவச சித்த மருத்துவ முகாம்!

தமிழக அரசும் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றமும் இணைந்து காரைக்குடி சுனிதா ஹாலில் 23-2-92 அன்று இலவச சித்த மருத்துவ முகாமை நடத்தின. இம்முகாமை திரு. கூத்தகுடி சண்முகம் தொடங்கி வைத்தார்.

இம்முகாமில் டாக்டர்கள் ஏ. அழகப்பன், ராஜசேகர், டி. விஜயலெட்சுமி, பார்மஸிஸ்ட் திரு. வி. கிறிஸ்தராஜா ஆகியோர் பங்கு கொண்டனர்.

வாதம், வெண்படை, இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களுக்கான மாத்திரை, பொடிகளை பொதுமக்கள் பெற்றனர்.

கட்டழகன் கண்ணதாசன்

பேராசிரியர் முனைவர் அர. சிங்காரவடிவேலன்



கூடலிலே பிறப்பெடுத்தான்; பட்டி விட்டுக்
குடியடுத்துக் கோமகனாய் வளர வந்தான்
பாடலிலே அவனுக்கு வியாழ நோக்கம்
பட்டினத்தை ஆதலினால் மணந்து கொண்டான்
ஆடலிலே வல்லவனாய் இருந்த தாலே
அடுத்தவர்க்கும் மருமகனாய் ஆகி விட்டான்
தேடரிய புகழாளன் கண்ண தாசன்
செட்டிமகன் என்றாலும் உலகச் சொத்து.

காஅப்பா துரையவரின் ஆசான் ஆவார்
கல்விவளர் குருகுலமே படித்த பள்ளி
'நீஅப்பா உருப்படவே மாட்டாய்' என்று
நெஞ்சார ஆசான்மார் வாழ்த்தி னாராம்
போ அப்பா எனவிரட்ட எட்டி னோடு
போட்டானாம் படிப்புக்குக் கடைமுழுக்கு
பா அப்பா அவனுக்குப் பாடம் சொல்லப்
பாவரசன் எனும்பட்டம் தானாய்ப் பெற்றான்

தன்னேரில் கவியரசாய் முடியைச் சூடத்
தமிழ்த்தாயைத் தனியாகச் சந்தித் தானோ?
கண்ணேறு படும்வகையில் கவிதை கொட்டக்
கலைமகள்தான் அவனைவந்து சந்தித் தாளோ?
எந்நேரம் பிறந்தானோ? கண்ண தாசன்
ஏனென்று கவிமகளே ஏவல் கேட்டாள்
பொன்நேரம் அவள்நாட்டில் பிறந்த நேரம்
புகழ்நேரம் தமிழ்த்தாய்க்கு யோக நேரம்.
படிக்காத மேதையென அவனைச் சொல்வார்
பாதிதான் அதிலுண்மை; மேதை யென்னும்

முடிக்காரன் அஃதுண்மை; பள்ளி நல்கும்
முறையான படிப்பில்லை; ஆனால் தானே

படிக்காத நூலில்லை; சொன்னால் கூடப்
பற்றுகிற கற்பூரம்; பிறவி ஞானி

அடிக்காமல் கவியெழுதும் ஆற்றல் தன்னை
ஆத்தாளின் பாலோடு குடித்த பிள்ளை.

முறையாக அவன்படிப்பை முடித் திருந்தால்
முடியாத கவியாற்றல் முடிந் திருக்கும்

உரைகாரன் ஆயிருப்பான் எம்மைப் போல
ஒருபதவிக் கூட்டுக்குள் அடைந் திருப்பான்

திரையுலகம் செந்தமிழை மறந் திருக்கும்
திருநாடு கவியரசை இழந் திருக்கும்

கரைதாண்டும் அவன்புகழோ சிறுத் திருக்கும்
கம்பனுக்குப் போட்டியின்றிப் போயி ருக்கும்

சந்தனத்தைப் புறங்காணும் மஞ்சள் மேனி
தங்கத்தைப் புறங்காணும் பட்டுச் சட்டை

செந்தமிழின் அகங்காணும் புவளத் துண்டு
சிகரெட்டுப் புகைநடுவே முல்லைப் பூக்கள்

தந்தத்தில் வெண்பட்டைச் சுற்றி னாற்போல
தாமரைப்பூஞ் சேவடியைத் தடவும் வேட்டி

அந்தத்தில் ஆளழகில் ஆணைப் பெண்ணாய்
ஆக்குகிற கட்டழகன் கண்ண தாசன்.

கட்டழகை தேன்முதலாய்க் கண்ட போது
கடவுளை நான் பாவியெனத் திட்டி விட்டேன்

பொட்டழகைப் பூவழகைக் கொண்ட பெண்ணாய்ப்
புவிமீதில் அடியேனைப் படைத் திருந்தால்

கட்டுடலைக் கடித்திருப்பேன்; வள்ளி யம்மை
காணாமல் மணந்திருப்பேன்; ஆனால் இன்று

பொட்டதனை இழந்திருப்பேன் ஆணாய் என்னைப்
புவிமீதில் படைத்தவனை வாழ்த்து கின்றேன்.

வீட்டைவிட்டுச் சொல்லாமல் ஓடிப் போனான்
விளையாடும் பருவத்தில் காதல் செய்தான்

ஆட்டினையும் மாடாக ஆக்கிக் காட்டும்
அரசியலில் கால்வைத்தான்; உலகில் உள்ள

கேட்டையெல்லாம் உருவாக்கும் திரைப் படத்தின்
கீழான சூழ்நிலையில் வாழ்ந்தான்; பொல்லாச்

சேட்டைகளின் திருவுருவாம் கண்ண தாசன்
செகமளக்கும் புகழடைந்தான் என்ன விந்தை?

குடிகாரன் பெண்பித்தன் கட்சி மாறி
கொள்கைகளில் நிறம்மாறும் பச்சை ஓந்தி

அடிநாளில் திமுக, அண்ணா தம்பி
அதன்பிறகு காங்கிரசில் அம்மா தாசன்
முடிநாளில் எம். ஜி. ஆர். மடியில் சாய்ந்தான்
முறையின்றி இவ்வாறு வாழ்ந்த யாரும்
படிமீதில் சிறந்ததுண்டா ? கண்ண தாசன்
பாப்புகழ வாழ்ந்தானே என்ன விந்தை ?

கங்கையினைக் காவிரியைக் குடத்தில் சேந்திக்
கைக்குவளை தனில்மொண்டு வழங்கல் போலச்
சங்கமுதல் தழைந்துவரும் இலக்கியத்தைச்
சந்தையிலே பொருள்விற்கும் கல்லா தோரும்
அங்கையிலே அள்ளிநிதம் உண்ண வைத்தான்
அடுத்தடுத்து வானொலியில் முழங்க வைத்தான்
மங்காத செந்தமிழைப் பரப்பும் வேலை
மாபெரிய அவன்சேவை மறுப்பார் உண்டோ ?

எடுத்துவைத்த அன்னம்போல் உணர்ச்சி தன்னை
எழுத்துவைக்கும் பெருங்கவிஞன் கண்ண தாசன்
தொடுத்துவைத்த பூச்சரமே அவன்தன் பாடல்
துடைத்துவைத்த பொற்சிலையே அவன்தன் மேனி
கெடுத்துவைத்த குடியாலும் கொள்கை இல்லாக்
கீழான வாழ்வாலும் மேதை செத்தான்
கொடுத்துவையாக் குறையாலே தமிழர் நாடு
கோமகனை இழந்தின்று விதவை ஆச்சே!

பளபளப்பாய்ப் பார்ப்பவர்க்குத் தெரிந்த போதும்
பாவேந்தன் அவன்வாழ்வில் அமைதி இல்லை
தொளதொளப்பாய்த் தாலிகளைக் கட்டி விட்டான்
தொட்டிலுக்கும் கட்டிலுக்கும் ஓய்வே இல்லை
மளமளப்பாய்ப் பணம்காசு வந்த போதும்
வரவுக்கு மிஞ்சிவிட்ட செலவி னாலே
தளதளக்கும் உலைபோலத் தவித்துப் போனான்
தனிவாழ்வில் கவியரசன் ஏழை யானான்.

ஏவலிடக் காத்திருக்கும் சொல்லின் கூட்டம்
இணையடிகள் தலையேற்கும் மக்கள் கூட்டம்
தாவலிடும் உணர்ச்சியெலாம் பாட்டில் தேங்கும்
தள்ளாடும் போதையிலும் தாளம் நிற்கும்
காவலிடும் மன்னவர்கள் காத்து நிற்பார்
கட்சிகளின் தலைவரெலாம் கட்சி சேர்ப்பார்
கோவலனாய்க் கவியரசன் வாழ்ந்த தாலே
கொஞ்சுதமிழ்த் தாயின்று விதவை யானாள்.

(காரைக்குடியில் 23-2-92 ஞாயிறு காலை நடைபெற்ற கவியரசு கண்ணதாசன் விழாவில் கவிதைப் பட்டிமன்றத்தில் நடுவர் பொறுப்பேற்றபோது பாடியது)



காரைக்குடியில் தொழில் மேலாண்மை வகுப்பு நிறைவு விழாவில் மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி வாழ்த்திப் பேசுகிறார். அருகே சுழற்குழுச் செயலாளர் திரு. வயி. கருப்பஞ் செட்டி, தலைவர் திரு. முத்துப்பழநியப்பன்.

தொழில் மேலாண்மை வகுப்பு நிறைவு விழா

காரைக்குடி சுழற் குழு 21-1-92 முதல் 28-1-92 முடிய 8 நாட்கள் நடத்திய தொழில் மேலாண்மை வகுப்பின் நிறைவு விழா 4-2-92 மாலை கம்பன் மணி மண்டபத்தில் சுழற்குழுத் தலைவர் திரு முத்துப்பழநியப்பன் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் திரு. வயி. கருப்பன்செட்டி அறிக்கை வாசித்தார். அந்த வகுப்புகளில் 150 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். மதுரை, விருதுநகர் போன்ற நகரங்களிலிருந்து வல்லுநர்கள் வந்து பங்கேற்று பயிற்சி வகுப்புகளை நடத்தினர்கள்.

பங்கேற்றவர்களுக்கு மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி சான்றிதழ்களை வழங்கி வாழ்த்திப் பேசினர். சிறப்பு விருந்தினர்களுக்கு திரு. ஏ. திருநாவுக்கரசு நினைவுப் பரிசுகளை வழங்கினர். திரு. சுப. சுந்தர கேசரி நன்றி கூறினர்.

ஒரு ரூபாய்க்கு சிலுக்கா ஆடுவாள் ?

நான் ஒரு ஓட்டலுக்குப் போனேன். டீ கொண்டுவரச் சொன்னேன். டீயில் ஈ ஒன்று ஆடிக்கொண்டிருந்தது. சர்வரிடம் ''என்னய்யா டீயில் ஈ ஆடுது'' என்றேன்.

அவர் '' நீங்க கொடுக்கிற ஒரு ரூபாய்க்கு ஈ ஆடாமல் நடிகை சிலுக்கா ஆடுவாள்? பேசாமல் அதை எடுத்துப் போட்டு விட்டுக் குடியுங்கள் சார்'' என்றான்.

காலம் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா ?

(காரைக்குடி கண்ணதாசன் விழாவில் பேராசிரியர் திரு. பாஸ்கரபாண்டியன் கூறியது.)

காரைக்குடியில் கண்ணதாசன் விழா !

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத்தின் சார்பில் காரைக்குடி சுனிதா ஹாலில் 22-2-92 & 23-2-92 ஆகிய இரு தினங்கள் கவியரசு கண்ணதாசன் விழாச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

முதல் நாள் நிகழ்ச்சி

விழா மங்கலப் பேரவை

முதல் நாள் நிகழ்ச்சியில் திரு. விஸ்வநாதன் இறை வணக்கம் பாட திரு. கே. இராஜேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினர். இவ் விழாவிற்கு குற்றவியல் நடுவர் மன்ற நீதிபதி திரு. எம். மாரியப்பன் தலைமை ஏற்றுப் பேசினர். மற்றும் திரு. அழ. சுப்பையா அம்பலம், திரு. முத்துபழநியப்பன் திரு. சித. சிதம்பரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்க திரு. கோ. இராமசாமி நன்றி கூறினர்.

சுழலும் சொற்போர்

அடுத்து சுழலும் சொற்போர் நிகழ்ச்சி நடைபெற்றது. இந் நிகழ்ச்சிக்கு பேராசிரியர் திரு. பாஸ்கரபாண்டியன் நடுவர் பொறுப் பேற்றுர். திரு. எஸ். இராமநாதன்வரவேற்புரைநிகழ்த்தினர். 'கண்ணதாசன் பாட்டுச்

"கண்ணதாசன் மூலவர்; நான் காவல்காரன்!"

எனக்கும் கவியரசருக்கும் 35 ஆண்டுகள் பழக்கம். பத்து ஆண்டுகள் அவர் என்னைக் கண்டு கொள்ளவே இல்லை. எங்காவது நானும் அவரும் சந்திப்போம். நான் "சிதம்பரம்" என்பேன். அவர் "ஓ! சிதம்பரம்!" என்று கூறியபடியே போய்க் கொண்டிருப்பார்.

1972 ல் எங்கள் கமலா திரையரங்கத் திறப்பு விழா வந்தது. அரசர் வந்தார்; அமைச்சர்கள் வந்தார்கள்; ஆனல் ஒருவர் வரவில்லை; அவர்தான் கண்ணதாசன் !

கண்ணதாசன் ஒரு குழந்தை. அவர் இரக்க குணம் படைத்தவர். யார் வந்து பணம் கேட்டாலும் தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் கொடுத்து விடுவார். அப்படி கவியரசரிடத்திலே உதவி பெற்று காணமல் போனவர்கள் பலர்.

கண்ணதாசன் மூலவர். திரு. சாதுசாரங்கபாணி போன்றவர்கள் அர்ச்சகர்கள். நான் அறங்காவலர்; காவல்காரன். கண்ணதாசனின் புகழை நான் ஆயுள் உள்ளவரை பரப்பிக் கொண்டிருப்பேன்.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

(காரைக்குடியில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் 'கண்ணதாசன் புகழ்க் காவலர்' பட்டம் பெற்றபின் ஆற்றிய ஏற்புரையிலிருந்து)

சுரங்கத்தில் பளிச்சென்று தெரிவது ...' என்ற பொதுத் தலைப்பில் நடைபெற்ற இச் சொற்போரில் திருவாளர்கள் புலவர் சாது சாரங்கபாணி, புலவர் மு. கதிரவன், எல். கே. சுபாஷ்சந்திர போஸ் திருமதி கௌசல்யா கிருஷ்ணன் செல்வி சு. சரசுவதி ஆகியோர் பங்கு பெற்று கனல் தெறிக்கப் பேசினர். பாமரமக்களுக்கு எளிதாகத் தெரிவது 'சமுதாய உணர்வே' என்று நடுவர் தீர்ப்பு வழங்கினர்.

பட்டிமன்றம்

இந் நிகழ்ச்சியில் திரு. விஸ்வநாதன் இறைவணக்கம் பாட திரு. கே. சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினர். "கவியரசர் பாடல்களில் விஞ்சிநிற்பது கவிதை வளமே ... கருத்துச் செறிவே ..." என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்திற்கு பெரும் புலவர் திரு. மு. ராஜரத்தினம் நடுவர் பொறுப் பேற்றார். 'கவிதை வளமே' என்ற அணியில் வழக்கறிஞர் திரு. த. இராமலிங்கம், திரு. எல். கே. சுபாஷ் சந்திரபோஸ், திரு. துரை சிவானந்தம் ஆகியோரும் 'கருத்துச் செறிவே' என்ற அணியில் பேராசிரியர் திரு. சாதுசாரங்கபாணி செல்வி சு. சரசுவதி புலவர் திரு. மா. இராமலிங்கம் ஆகியோரும் வாதிட்டனர். கவிதை வளமும் கருத்துச் செறிவும் இருந்தால்தான் மக்கள் மனதில் கவிஞன் நிலைத்து நிற்க முடியும் என நடுவர் தீர்ப்பு வழங்கினர். திரு. என். பி. இராமசாமி நன்றி கூறினர்.

பாராட்டு விழா

அடுத்து துணைவேந்தர் டாக்டர் திரு. கே. நாகப்பன் தலைமையில் நமது இதழின் ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியாருக்கு 'கண்ணதாசன் புகழ்க் காவலர்' பட்டம் வழங்கிய நிகழ்ச்சியும் குழந்தை இலக்கியத் திற்கு முதல் பரிசு பெற்ற கவிஞர் திரு. செல்லகணபதிக்கு பொன்னுடை அணிவித்துக் கௌரவித்த நிகழ்ச்சியும் நடைபெற்றன. (இச் செய்தி இவ்விதழில் 26 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது)

இரண்டாம் நாள் நிகழ்ச்சி

சிந்தனை அரங்கம்

இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சியில் திரு. விஸ்வநாதன் இறை வணக்கம் பாட 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன் வரவேற்றுப் பேசினர்.

'சமுதாயச் சிக்கலுக்கு கவியரசரின் பாடல்கள் தீர்வு காட்டுமா?' என்ற தலைப்பில் சிந்தனை அரங்கம் நடைபெற்றது. கூத்தகுடி திரு. ச சண்முகம் தலைமையில் திரு. பா. கணேசன் திருமதி அலமேலு முகுந்தன் செல்வி திலகவதி, திரு. ஆ. குறட்பித்தன் ஆகியோர் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள். திரு. சீதாராமன் நன்றி கூறினர்.

கவிதைப் பட்டிமன்றம்

அடுத்து "கண்ணதாசன் பாடல்களில் விஞ்சி நிற்பது காதலே-தத்துவமே..." என்ற தலைப்பில் கவிதைப் பட்டிமன்றம் நடைபெற்றது. பேராசிரியர் டாக்டர் திரு. அர. சிங்காரவடிவேலன் நடுவர் பொறுப்பேற்றார். 'காதலே ..' என்ற அணியில் திரு. எல். கே. சுபாஷ் சந்

திரபோஸ் திரு. கா. முத்துமணி திரு. கழநியூரானும் ''தத்துவமே ..' அணியில் வியாசர்பாடி திரு. இராமலிங்கம் கவிஞர் திரு. மரபின் மைந்தன் கவிஞர் திரு. வி. கே. கஸ்தூரிநாதனும் பங்கு பெற்று பாடி வாதிட்டனர். எஞ்சி நிற்பது தமிழின் சக்தி என்று நடுவர் தீர்ப்பு வழங்கினார்.

கவியரங்கம்

அடுத்து அரிமா திரு. ஆர். எம். சுந்தர் வரவேற்புக் கவிதை படிக்க வட்டாட்சியர் பாவலர் திரு. பா. வே. இராமசாமி தொடக்க உரை நிகழ்த்திய பின் கவியரங்கம் நிகழ்ந்தது. ''நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்...'' என்ற பொதுத் தலைப்பில் நடைபெற்ற இக்கவியரங்கத்திற்கு வியாசர்பாடி திரு. இராமலிங்கம் நடுவர் பொறுப்பேற்றார். கவிஞர்கள் அக்ரி இராமசுப்பிரமணியன், செல்வி சுவாதி, வி.கே.கஸ்தூரி நாதன், கனவுதாசன், அழ. அண்ணாமலை தங்க செந்தில்குமார் கவிஞர் சிவல்புரி சிங்காரம் ஆகியோர் பங்கு பெற்றனர்.

இவ்விழாவில் திரைப்பட இயக்குநர்திரு.முக்தா சீனிவாசன் காரைக்குடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி கற்பகம், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு. கே. இராதா கிருஷ்ணன் ஆகியோர் பங்கு பெற்று உரையாற்றினர்.

பரிசளிப்பு விழா

பின்னர் 'கண்ணதாசன் புகழ்க் காவலர்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் தலைமையில் நடைபெற்ற விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளிக் குழந்தைகளுக்குத் 'தமிழர் தந்தை' சி. பா. ஆதித்தனார் நினைவுப் பரிசுகளை மதுரை வானொலி நிலைய இயக்குநர் செல்வி எஸ். லீலா வழங்கி உரையாற்றினார்.

சிறப்புரை

அடுத்து 'எங்கள் நெஞ்சில் கவியரசர்' என்ற தலைப்பில் நீதிபதி திரு. எம். மாரியப்பன், இலக்கியச் செல்வர் திரு. மு. சிதம்பர பாரதி, கோடீஸ்வரா திரு. எஸ். அழகப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். முன்னதாக மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன் வரவேற்புரை நிகழ்த்த திரு. எம். பெரியய்யா நன்றி கூறினார்.

திருமணம்

மதகுபட்டி சொக்கலிங்கபுரம் திரு. சுப. சுப. சொ. சுப்பிரமணியன் செட்டியார் (சுபம் டிராவல் ஏஜன்ஸி) புதல்வி செல்வி கல்யாணி என்கிற சுகந்தி B. A. க்கும் சொக்கநாதபுரம் திரு. வயி. ராம. சொ. இராமநாதன் செட்டியார் புதல்வன் செல்வன் சொக்கலிங்கம் D. M. E. க்கும் 9-2-92 அன்று மதகுபட்டி சொக்கலிங்கபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பேராசிரியர், பொற்கிழிக் கவிஞர், திரு. சொ. சொ. மீ. சுந்தரம் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

திருமணத்திற்குத் தொழிலதிபர்கள், வணிகர்கள், நண்பர்கள் பெருமளவில் வந்திருந்து சிறப்பித்தனர்.

உங்கள் நூலும் எங்கள் ஆய்வும்

நகரத்தார் யார், எவர்?

(இந்நூலின் ஆசிரியர்: திரு. பழ அண்ணுமலை அவர்கள். முகவரி : 8, நைனியப்பன் தெரு, சென்னை-600 001. முதல் தொகுதியான இந்நூல் 242 பக்கங்களைக் கொண்டுள்ளது. விலை ரூ. 35-00)

''நகரத்தார் யார், எவர்?'' என்ற இந்த அரிய நூலை, நகரத்தார் வரலாற்றையும் நகரத்தார் பண்பாடுகள், பழக்க வழக்கங்களையும் விளக்கும் பணியில் நீண்ட காலமாக ஈடுபட்டு வரும் பள்ளத்தூர் பழ அண்ணுமலை அவர்கள் தயாரித்திருக்கிருர்கள். இவர்கள் ஏற்கனவே ''நகரத்தார் திருமண நடைமுறை'', ''செட்டிநாடு-ஊரும் பேரும்'', ''நகரத்தார் கணக்கியல் முறை'' ஆகிய நகரத்தாருக்குச் சிறப்புச் சேர்க்கக்கூடிய—நகரத்தாருக்குப் பெருமை சேர்க்கக்கூடிய நூல்களைத் தயாரித்து வெளியிட்ட பெருமைக்குரியவர்கள்.

இது அவர்களது நான்காவது படைப்பாகும். நம்மவர்களிடம் விஞப் படிவம் அனுப்பி விவரங்களைப் பெறுவது என்பது ரொம்பச் சிரம மான செயல். அப்படி இருந்தும் இவர்கள் ஐயாயிரம் விஞப் படிவங்கள் அனுப்பிப் பெற்றிருக்கிருர்கள். இது முதல் தொகுதிதான். இன்னும் நான்கைந்து தொகுதிகள் வெளிவர இருக்கின்றன.

இந்நூலில் பெயர்களும் வாழ்க்கைக் குறிப்பும் அகர வரிசைப்படி இருப்பது ஒரு சிறப்பு. தமிழ் நாட்டில் உள்ளவர்களைப் பற்றி மட்டும் இல்லாமல் வெளி மாநிலங்களில் வெளி நாடுகளில் வாழும் நம்மவர் களைப் பற்றி ஏராளமான விவரங்கள் காணப் பெறுகின்றன. சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரைப் பற்றியும் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த நூலை முழுமையாகப் படித்துப் பார்ப்போமாஞல் 'இவ்வளவு சிறப்புக்குரியவர்கள் நம்மில் இருக்கிருர்களா?' என்ற விஞ எழும்!

ஓரிரு இடங்களில் எழுத்துப் பிழைகள் இருந்தாலும் இதன் சிறப்பு அதனை மறக்கச் செய்துவிடுகிறது.

ஆசிரியர் பழ. அண்ணுமலை அவர்களுடைய முயற்சியும், கடுமை யான உழைப்பும் போற்றுதற்குரியது.

நகரத்தார் ஒவ்வொருவருடைய வீட்டிலும் இருக்க வேண்டிய பயனுள்ள நூல் இது.

— ''எல்லெஸ்''

திருமணம்

குழிபிறை திரு மு. முப மு. பழநியப்ப செட்டியார் புதல்வன் செல்வன் முத்துராமன் B.E.க்கும் கண்டரமாணிக்கம் திரு. பெ. ஆத கா. ஆதப்ப செட்டியார் புதல்வி செல்வி வள்ளியம்மை என்ற சிட்டு B.Com.க்கும் 9-2-92 அன்று நாச்சியாபுரம் சு.வி.நா. இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது

திருமணத்திற்குத் தொழிலதிபர்கள், வணிகர்கள், நண்பர்கள் பெருமளவில் வந்திருந்து சிறப்பித்தனர்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத்தெரு, மதுரை—625 009ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் அதே முகவரியிலிருந்து வெளிடப்பெறுகிறது. ஆசிரியர்: வி.என்.சிதம்பரம்.

நகரத்தார் குரல்

சந்தா விவரம்

ஓர் ஆண்டு	ரூ. 30—00
டெபாசிட் சந்தா	ரூ. 300—00
வெளிநாடு (ஓர் ஆண்டுக்கு வான ஊர்தி அஞ்சல் கட்டணம் உள்பட)	ரூ. 200—00

விளம்பர விவரம்

அட்டை (*வெளிப் பக்கம்*)	ரூ. 500 - 00
அட்டை (*உள் பக்கம்*)	ரூ 300—00
முழுப் பக்கம்	ரூ. 200—00
அரைப் பக்கம்	ரூ. 100—00
கால் பக்கம்	ரூ. 50—00

(அட்டையைத் தவிர மற்ற மூன்று வகை விளம்பரக் கட்டணங்களும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக சிறிது உயர்த்தப் பெற்றுள்ளது)

தொடர்ந்து 12 மாதங்களுக்கு மேல் வெளியிடப் பெறும் விளம்பரங்களுக்குக் கட்டணத்தில் சலுகை உண்டு.

மணமகன் தேவை, மணமகள் தேவை, சுவீகாரம் போன்ற விளம்பரங்கள் முக்கால் கட்டணத்தில் வெளியிடப் பெறும்.

மணி விழா, திருமணம் போன்ற செய்திகளை ஒளிப் படத்துடன் வெளியிடக் கட்டணம் (அரைப் பக்கம் அளவு) ரூ. 100-00



மதகுபட்டி சொக்கலிங்கபுரம் திரு. சுப. சுப. சொ. சுப்பிரமணியன் செட்டியார் புதல்வி செல்வி கல்யாணி என்ற சுகந்தி B. A. க்கும் சொக்கநாதபுரம் திரு. வயி. ராம. சொ. இராமநாதன் செட்டியார் புதல்வன் செல்வன் சொக்கலிங்கம் D. M. E. க்கும் 9-2-92 அன்று மதகுபட்டி சொக்கலிங்கபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



கலாமடம்-பாதரக்குடி ஆதீனகர்த்தர் தவத்திரு இரவீந்திர சுவாமிகளின் 37 ஆவது ஜெயந்தி விழாவில் (26-12-91) 'அருட்பணி அண்ணல்' பட்டம் பெற்ற கோட்டையூர் அழகாபுரி திரு. வீர. அழ. அ. அரசப்ப செட்டியார் தம்பதியுடன் திரு. சோம. நாராயணன் செட்டியார் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ